20.12.2016

# மாமல்லபுரத்தில் இயல்பு நிலை திரும்பியது கடலுக்கு செல்ல தயாராகும் மீனவர்கள்



‘வார்தா’ புயல் தாக்கத்தில் இருந்து இயல்பு நிலைக்கு திரும்பிய மீனவர்கள், கடலுக்கு செல்ல தயாராகி வருகிறார்கள். தங்களின் சேதமடைந்த மீன்பிடி வலைகளை சீரமைக்கும் பணியில் அவர்கள் மும்முரமாக ஈடுபட்டு உள்ளனர்.

## வலைகள் சேதம்

கடந்த 12–ந் தேதி கோரத்தாண்டவம் ஆடிய ‘வார்தா’ புயல், கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள மீனவர்கள் பகுதியில் சூறாவளியாக சூழன்றடித்தது. கிழக்கு கடற்கரை சாலையில் கொட்டிவாக்கம் குப்பம் முதல் ஆலம்பரை குப்பம் வரை உள்ள 30–க்கும் மேற்பட்ட மீனவ கிராமங்களில் புயலால் ஏற்பட்ட சூறாவளியில் கடற்கரையில் நிறுத்தி

வைக்கப்பட்ட படகுகள் தூக்கி வீசப்பட்டன. வலைகள் அறுந்து சேதமடைந்தன. ஒரு சில இடங்களில் படகு என்ஜின்களும் பழுதடைந்தன.

இதில் மாமல்லபுரம் அடுத்த கொக்கிலமேடு , புதுஎடையூர்குப்பம், பட்டிபுலம்குப்பம், நெம்மேலிகுப்பம், சூளேரிக்காட்டு குப்பம் , கரிக்காட்டுகுப்பம், புதுகல்பாக்கம், வெண்புருஷம், தேவனேரி உள்ளிட்ட மீனவ குப்பங்களில் மின் கம்பங்கள் முறிந்து , மின் கம்பிகள் அறுந்து விழுந்ததால் மின் இணைப்புகள் முற்றிலும் துண்டிக்கப்பட்டன.

<u>இயல்பு நிலை திரும்பியது</u>

தற்போது மாமல்லபுரம் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு படிப்படியாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் மீனவர்கள் இயல்பு நிலைக்கு திரும்பி வருகின்றனர்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக புயல் பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கப்பட்ட மீனவர்களும் தங்களின் வீடுகளுக்கு திரும்பி வருகின்றனர்.

<u>வலைகளை சீரமைக்கும் பணி</u>

தற்போது கடலுக்கு செல்ல ஆயத்தமாகி வரும் மீனவர்கள் , புயலினால் சேதமடைந்து அறுந்த மீன்பிடி வலைகளை சீரமைக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு உள்ளனர். குறிப்பாக கல்பாக்கம் நுழைவு வாயிலுக்கு அருகிலும், மாமல்லபுரம் ஐந்துரம் பகுதியில் இருந்து 3 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கொக்கிலமேடு மீனவர் பகுதியில் புயலினால் சேதமடைந்த பெரிய வலை , சின்னவலைகளை சீரமைத்து வழக்கம்போல் கடலுக்கு செல்ல தயாராகி வருகின்றனர்.

மேலும் மீன்வளத்துறை அதிகாரிகள் கடற்கரை மீனவ பகுதிகளில் ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட மீனவர்கள் குறித்த பட்டியல் தயாரித்து

வருகின்றனர். அதிக பாதிப்பு , குறைவான பாதிப்பு குறித்து அறிக்கை தயார் செய்து அதன்படி மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என்றும் அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

**மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் குரும்பூர் சர்க்கரை ஆலையை : திறக்கக்கோரி கரும்பு விவசாயிகள் கலெக்டரிடம் மனு**



குரும்பூர் சர்க்கரை ஆலையை திறக்க கோரி புதுக்கோட்டையில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கரும்பு விவசாயிகள் கலெக்டரிடம் மனு அளித்தனர்.

மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

புதுக்கோட்டை கலெக்டர் அலுவலகத்தில் நேற்று மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது கூட்டத்திற்கு கலெக்டர் கணேஷ் தலைமை . தாங்கி பொதுமக்களிடம◌ இருந்து மனுக்களை பெற்று கொண்டார் .

வீட்டுமனை பட்டாக்கோரி மனு

கூட்டத்தில் கந்தர்வகோட்டை கீழத்தெரு பகுதியை சேர்ந்த 10-க்கும் மேற்பட்ட பெண்கள் கொடுத்த மனுவில் , எங்கள் பகுதியில் நாங்கள் 40 ஆண்டுகளாக வசித்து வருகிறோம் நாங்கள் அதிக வாடகை கொடுத்து .

வாடகை வீட்டில் வசித்து வருகிறோம் இதனால் நாங்கள் பல . எங்களது பெயரில் எந்த நிலமும் . கஷ்டங்களை அனுபவித்து வருகிறோம் எனவே எங்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வழங்க .கிடையாது . கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறியிருந்தனர்

இதைப்போல கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்க மாவட்ட பொருளாளர் செங்கோல் கொடுத்த மனுவில் , கறம்பக்குடி தாலுகாவில் முள்ளங்குறிச்சி தெற்கு வட்டம் , வடக்கு வட்டம் , திரு மணஞ்சேரி பள்ளித்திகாடு ஆகிய பகுதிகளில் சுமார் 200 ஏக்கர் வாழை பயிரிடப்பட்டு உள்ளது இந்த . பகுதிகளில் பயிர் காப்பீடு பதிவு செய்வதற்கு அனுமதி இல்லை என வங்கிகளில் சொல்கின்றனர் கூட்டுறவு தொடக்க வேளாண்மை வங்கியும் . எனவே கலெக்டர் விடுபட்ட பகுதிகளில் . பதிவு செய்ய மறுக்கின்றனர் பயிர் காப்பீட்டிற்கு பதிவு செய்ய அனுமதி வழங்க வங்கிகளுக்கு . உத்தரவிட வேண்டும் என கூறியிருந்தார்

சர்க்கரை ஆலையை திறக்க வேண்டும்

எங்கள் பகுதிகளில் பல ஏக்கரில் கரும்பு சாகுடி செய்யப்பட்டு உள்ளது . நாங்கள் விளைவிக்கும் கரும்புகளை அறந்தாங்கி தாலுகா, குரும்பூரில் உள்ள சர்க்கரை ஆலைக்கு அனுப்பி வருகிறோம் மேற்படி குரும்பூர் . சர்க்கரை ஆலை ஆண்டுதோறும் டிசம்பர் மாதம் திறக்கபட்டு சர்க்கரை ஆலை செயல்பட்டு வருகிறது ஆனால் இந்த ஆண்டு குரும்பூர் சர்க்கரை . ஆலை வருகிற ஜனவரி மாதம்20-ந் தேதிக்கு மேல்தான் திறக்கப்படும் என தெரியவந்து உள்ளது.

இதனால் நாங்கள் பல ஏக்கரில் பயிரிடப்பட்டு உள்ள கரும்புகள் அனைத்தும் பூ பூத்து, நீர்சத்து குறைந்தும், கருகியும் வீணாகி போய்விடும். கரும்பு பயிரிடப்பட்டு ஒரு ஆண்டிற்குள் அதனை அறுவடை செய்துவிட அறுவடை காலம் தவறிவிட்டால் பயிரிடப்பட்ட கரும்புகள் .வேண்டும் மேலும் தற்பொழுது மழை இல்லாத . அனைத்தும் வீணாகிவிடும் . காரணத்தால் கரும்புகள் விரைவில் கருகிவிடும் நிலை உள்ளது எனவே

குரும்பூர் சர்க்கரை ஆலையை இந்த மாதத்தில் திறக்க கலெக்டர் (டிசம்பர்) .கணேஷ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறியிருந்தனர்

## பணத்தட்டுப்பாடு காரணமாக பாம்பனில் ரூ .200–க்கு விலைபோன கிளி மீன்கள்; மீனவர்கள் ஏமாற்றம்



ராமேசுவரம் அருகே உள்ள பாம்பன் தெற்குவாடி கடற் கரையில் இருந்து நேற்று முன்தினம் 70–க்கும் மேற்பட்ட விசைப் படகுகளில் 300–க்கும் மேற்பட்ட மீனவர்கள் தென் கடல் பகுதியான மன்னார் வளைகுடா கடல் பகுதியில் மீன் பிடித்து விட்டு நேற்று காலை கரை திரும்பினார்கள். கரை திரும்பிய ஒவ்வொரு படகிலும் சீலா , பாறை, கிளி, கடல் விரால் ,மாவுலா உள்ளிட்ட பல வகை மீன்கள் பிடிபட்டு இருந்தன. பாம்பனில் மீனவர்கள் பிடித்து வரும் கிளி மீன்கள் சிங்கப்பூர் , ஹாங்காங், மலேசியா உள்ளிட்ட பல வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகும். கிளி மீன்கள் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு வரை 1 கிலோ ரூ. 750–க்கு விலைபோனது. ஆனால் கடந்த சில வாரங்களாக கிளி மீன்களுக்கு உரிய விலை கிடைக்கவில்லை. 1 கிலோ ரூ. 200–க்கு மட்டுமே விலை போவதால் மீனவர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

இதுகுறித்து பாம்பன் மீனவர் பேட்ரிக் கூறியதாவது:–

500, 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று மத்திய அரசு அறிவித்தபின் அனைத்து மீன்களின் விலையும் குறைந்து விட்டன. பணத் தட்டுப்பாடு சரியாகாததுடன் வங்கியில் ரூ. 24 ஆயிரத்துக்கு மேல் கூடுதல் பணமும் எடுக்க முடிய வில்லை. இதேபோல் மீனவர்கள் பிடித்துவரும் மீன்களை கொள்முதல் செய்ய வரும் வியாபாரிகள் ரொக்க பணம் கொடுக்க முடியாமல் தவித்து வருகின்றனர். மீனவர்களுக்கு காசோலையாக கொடுத்து வருகின்றனர். பணத் தட்டுப்பாடு காரணமாக ரூ.750–க்கு விலை போன வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் கிளி மீன்கள் 1 கிலோ ரூ.200–க்கு மட்டுமே விலை போகிறது. இதேபோல் பல மீன்களின் விலையும் குறைந்து விட்டன. பணத் தட்டுப்பாடு சீராகாததால் மீன் பிடி தொழில் முழுமையாக முடங்கி போயுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

## ‘வார்தா’ புயலால் சேதமடைந்த பயிர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் கலெக்டரிடம் விவசாயிகள் கோரிக்கை

‘வார்தா’ புயலால் சேதமடைந்த பயிர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்று குறைதீர்வு நாள் கூட்டத்தில் கலெக்டர் பிரசாந்த் மு.வடநேரேவிடம் விவசாயிகள் கோரிக்கை மனு அளித்தனர்.

### குறைதீர்வு நாள் கூட்டம்

திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம் நேற்று நடந்தது. கலெக்டர் பிரசாந்த் மு.வடநேரே தலைமை தாங்கினார். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த பொதுமக்கள் தங்கள் கோரிக்கைகளை மனுக்களாக கலெக்டரிடம் அளித்தனர்.

ரேஷன் அட்டை , முதியோர் உதவித்தொகை , கல்வி உதவித்தொகை உள்ளிட்ட 600 மனுக்கள் பெறப்பட்டன. மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கலெக்டர் உத்தரவிட்டார்.



<u>சேதமடைந்த பயிர்களுக்கு இழப்பீடு</u>

விவசாயிகள் அளித்த மனுக்களில் , கடந்த 12–ந் தேதி வீசிய 'வார்தா' புயலால் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பயிரிடப்பட்டிருந்த வாழை , கரும்பு உள்ளிட்ட பயிர்கள் சாய்ந்து சேதமடைந்தன. சேதமடைந்த பயிர்கள் குறித்து அதிகாரிகள் உடனடியாக கணக்கெடுத்து அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலும் சேதமடைந்த பயிர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறியிருந்தனர்.

மனுக்களை பெற்றுக்கொண்ட கலெக்டர் பிரசாந்த் மு.வடநேரே உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.

<u>நலத்திட்ட உதவிகள்</u>

கூட்டத்தில் 2 மாற்றுத்திறனாளிகளுக்கு 3 சக்கர சைக்கிள்களும் , 2 மாற்றுத்திறனாளிகளுக்கு சக்கர நாற்காலிகளும் , 2

மாற்றுத்திறனாளிகளுக்கு காதொலி கருவியும் , மாற்றுத்திறனாளி ஒருவருக்கு ஊன்றுகோல் ஆகிய நலத்திட்ட உதவிகளை கலெக்டர் பிரசாந்த் மு.வடநேரே வழங்கினார்.

இதில் மாவட்ட வருவாய் அலுவலர் பழனி , கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) குணசேகரன் மற்றும் அனைத்து துறைகளையும் சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

குறைதீர்வு நாள் கூட்டத்தையொட்டி கலெக்டர் அலுவலக வளாகத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

## விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய வேண்டும் கலெக்டர் வேண்டுகோள்




விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய வேண்டும் என கலெக்டர் எல்.சுப்பிரமணியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆலோசனை கூட்டம்

விழுப்புரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர்களுக்கான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு கூட்டுறவு சங்க மண்டல இணைப்பதிவாளர்

சந்திரசேகரன் தலைமை தாங்கினார். கூட்டத்தில் கலெக்டர் எல்.சுப்பிரமணியன் கலந்துகொண்டு பேசியதாவது:–

விழுப்புரம் மாவட்டம் மழையை நம்பி உள்ள மாவட்டம். ஒவ்வொரு ஆண்டும் பெய்ய வேண்டிய மழை பெய்யாமல் போகும்போது விவசாயிகள் படும் இன்னல்களுக்கு பயிர் காப்பீடு மிகவும் அவசியம். எனவே விவசாயிகள் அனைவரும் பயிர் காப்பீடு செய்ய வேண்டும்.

பயிர் காப்பீடு

இதற்கு முன்பு இருந்த திட்டம் அவ்வளவு பயன் உள்ளதாக இல்லாததால் விவசாயிகள் நிவாரணம் பெற இயலவில்லை. தற்போதுள்ள திட்டத்தில் விவசாயிகள் நிச்சயம் பயன்பெறுவார்கள். ஆனால் பயிர் காப்பீடு செய்வதில் விவசாயிகள் எதிர்பார்த்த அளவில் சேரவில்லை. ஆகவே தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர்கள் , விவசாயிகள் கடன் பெறும்போது கடன் பெறாத ஒவ்வொரு விவசாயியையும் இந்த திட்டத்தில் சேர்க்க உதவ வேண்டும்.

தற்போது மணிலா , உளுந்து, மரவள்ளி, வெங்காயம், மக்காச்சோளம், வாழை போன்ற பயிர்களுக்கு நவரை பட்டத்தில் நெல் பயிருக்கும் , வருகிற பிப்ரவரி மாதம் 15–ந் தேதி வரை கடன் பெறும் மற்றும் கடன் பெறாத விவசாயிகள் காப்பீடு செய்யலாம்.

இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் வேளாண் இணை இயக்குனர் கார்த்திகேயன் மற்றும் கூட்டுறவு சரக துணைப்பதிவாளர்கள் , தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

தினகரன்

## கிராம மக்களுக்கு கைவினை பொருட்கள் தயாரிப்பு பயிற்சி

விழுப்புரம், : கிராமப்புற ஏழை , எளிய மக்களின் தொழில் திறன் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில் மத்திய அரசு பல்வேறு உதவிகளை செய்து வருகிறது. விழுப்புரம் அருகே அய்யங்கோவில்பட்டு , அய்யூர்அகரம் கிராமத்தில் பல ஆண்டுகளாக விநாயகர் சிலைகள் தயாரிப்பு பணியில் கைவினை தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இங்கு ஏழை, எளிய மக்களுக்கு கைவினை பொருட்கள் உற்பத்தி செய்வது குறித்து பயிற்சி அளிக்க மாவட்ட நிர்வாகம் முடிவு செய்தது. அதன்படி மத்திய ஜவுளித்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கைவினை பொருட்கள் உற்பத்தி நிறுவனம் சார்பில் சென்னையில் உள்ள தென்மண்டல கைவினை பொருட்கள் உற்பத்தி மைய பயிற்றுனர்கள் கடந்த 3 நாட்களாக அய்யங்கோவில்பட்டு கிராமத்தில் முகாமிட்டு அங்குள்ள ஏழை, எளிய மக்களுக்கு கைவினை பொருட்கள் உற்பத்தி செய்வது குறித்து பயிற்சி அளித்து வருகின்றனர்.

இங்கு ரசாயன கலப்பு இல்லாதபடி வெறும் களிமண்ணால் மட்டுமே பெண்களுக்கான அணிகலன்கள் செய்தல் , சாமி சிலைகள் , வீட்டு உபயோக பொருட்கள் தயாரித்தல் ஆகியவை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த பயிற்சியை சப் கலெக்டர் சரயூ பார்வையிட்டு பயிற்சியில் ஈடுபட்டவர்களுக்கு பல்வேறு அறிவுரைகள் கூறி அவர்களை மேலும் ஊக்கப்படுத்தினார்.

## விளைச்சல் அதிகரிப்பால் அரூரில் காலிபிளவர் விற்பனை அமோகம்

அரூர், : விளைச்சல் அதிகரிப்பால் அரூரில் காலி பிளவர் விற்பனை அதிகரித்துள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் , தேன்கனிக்கோட்டை, சூளகிரி, தளி உள்ளிட்ட பகுதிகளில் அதிக அளவில் காலிபிளவர் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது விளைச்சல் அதிகரித்து , மாநிலத்தின் அனைத்து பகுதிகளுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. மொத்தமாகவும் சில்லறையாகவும் கொள்முதல் செய்யப்பட்டு வாரச்சந்தைகளிலும், மினிடோர் வாகனங்கள் மூலம் தெருத்தெருவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

அரூரில் வாரச்சந்தையிலும் , சாலையோரங்களிலும் காலிபிளவர் விற்பனை அமோகமாக நடைபெற்று வருகிறது. பூவின் அளவை பொறுத்து ஒரு காலிபிளவர் ₹10 முதல் ₹20 வரை விற்பனை செய்யப்படுகிறது.

## மேச்சேரி சுற்றுவட்டாரத்தில் விளைச்சல் அதிகரிப்பால் சாமந்தி பூ விலை வீழ்ச்சி கிலோ ₹5க்கு விற்பனை

மேச்சேரி, : மேச்சேரி சுற்றுவட்டார பகுதிகளில் கடந்தாண்டை விட இந்தாண்டு சாமந்தி பூ விளைச்சல் அதிகரிப்பால் , விலை வீழ்ச்சியடைந்துள்ளது. சந்தையில் ஒரு கிலோ சாம்பந்தி பூ ₹5க்கு விற்பனையாகிறது.மேச்சேரி சுற்றுவட்டார பகுதியான கம்மப்பட்டி , கோவில்வெள்ளார், வெள்ளப்பம்பட்டி, எருமப்பட்டி, வாழியூரான்கொட்டாய் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட கிராமங்களில் சுமார் 500 ஏக்கரில் விவசாயிகள் சாமந்தி பூக்களை பயிரிட்டுள்ளனர். இதில் குறிப்பாக வெள்ளை சாம்பந்தி , வாடாமல்லி சாம்பந்தி , மஞ்சள் சாமந்தி, மெர்க்குரி மஞ்சள் உள்ளிட்ட 12க்கும் மேற்ப்பட்ட ரகங்களை

பயிரிட்டுள்ளனர். இங்கிருந்து கர்நாடக , ஆந்திரா, கேரளா உள்ளிட்ட வெளி மாநிலத்திற்கும் , மற்றும் தமிழகத்தில் உள்ள சென்னை , கோவை, மதுரை, சேலம் ஆகிய இடங்களக்கும் விற்பனைகாக அனுப்புகின்றனர்.

கடந்தாண்டு சீஸனின் போது சாமந்தி பூ கிலோ ₹150 முதல் ₹250 வரை விற்பனையானதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். இதன் காரணமாக இந்தாண்டும் விவசாயிகள் சாமந்தி பூ பயிரிட்டால் நல்ல லாபம் கிடைக்கும் என்பதால் , கடந்தாண்டை விட இந்த ஆண்டு சுமார் 200 ஏக்கர் கூடுதலாக பயிரிட்டனர். இந்நிலையில் சாமந்தி மிதமான மழை, மற்றும் தட்பவெட்ப நிலை சரியாக இருந்து வருவதால் விளைச்சல் அதிகரித்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஆனால் , சந்தைக்கு பூக்களின் வரத்து அதிகரித்துள்ளதால், சாமந்தி பூக்களின் விலை கடுமையாக சரிந்துள்ளது. இதனால் நேற்று சந்தையில் சாமந்தி பூ கிலோ ஒன்று ₹5 முதல் ₹10 வரை மட்டுமே விற்கப்பட்டதால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில்: சாமந்தி பூ பயிரிடுவதற்கு ஏக்கர் ஒன்றுக்கு சுமார் ₹30 முதல் ₹50 ஆயிரம் வரையில் செலவிடப்பட்டுள்ளது. கடந்தாண்டு நல்ல விலை கிடைத்தால், இவ்வாண்டு கூடுதலாக பூக்களை பயிரிட்டோம். தற்போது நல்ல மகசூல் கிடைத்தும் விலை இல்லாததால் பூ பறிப்பதற்கான கூலி கூட கொடுக்க முடியவில்லை. இதனால் பூக்களை பறிக்காமல் செடியில் விட்டுள்ளோம். செடியிலேயே பூக்கள் கருகி வருவது வேதனையளிக்கிறது. வேளாண் துறை அதிகாரிகள் ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய இழப்பீடு பெற்றுத்தர வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## மழை வளத்தை அதிகரிக்க சேலம்-இரும்பாலை ரோட்டில் காலி நிலத்தில் மரக்கன்றுகள்

சேலம், : மழை வளத்தை அதிகரிக்க சேலம் இரும்பாலை ரோட்டில் காலியாக உள்ள அரசு நிலத்தில் நெடுஞ்சாலைத்துறை சார்பில் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. தமிழகத்தில் இருவழிச்சாலையாக இருந்த பெரும்பாலான தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகள் 4 வழிச்சாலையாக மாற்றப்பட்டுள்ளது. இதற்காக சாலையோரம் இருந்த ஆயிரக்கணக்கான மரங்கள் அகற்றப்பட்டன. இதன் காரணமாக மழை வளம் குறைந்தது. இந்த நிலையில் மழை வளத்தை அதிகரிக்கும் வகையில், தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் மரங்கள் வளர்க்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் , சேலம்-இரும்பாலை ரோட்டில் எஸ்.கொல்லப்பட்டி , சித்தனூர், அரசு மருத்துவக்கல்லூரி உள்ளிட்ட இடங்களில் காலியாக உள்ள அரசு புறம்போக்கு நிலத்தில் நெடுஞ்சாலைத்துறை சார்பில் பல்வேறு வகையான மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளது.

இது குறித்து அப்பகுதி மக்கள் கூறுகையில் , ''தமிழகம் முழுவதும் சாலை விரிவாக்க பணிக்காக ஆயிரக்கணக்கில் சாலையோர மரங்கள் அகற்றப்பட்டன. இதனால் தமிழகத்தில் நாளுக்கு நாள் மழை வளம் குறைந்து வருகிறது. மழை வளத்தை அதிகரிக்க நெடுஞ்சாலைத்துறையினர் தமிழகத்தில் பல்வேறு சாலைகளில் மரக்கன்றுகளை நட்டு வருகின்றனர். சாலைகளில் நடப்படும் மரக்கன்றுகளை சுற்றி பச்சை துணியால் மூடி பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த மரங்களுக்கு அவ்வப்போது தண்ணீர் விடவேண்டும். இதேபோல், மலைப்பகுதி மற்றும் ஊர் பகுதிகளில் உள்ள அரசு புறம்போக்கு நிலங்களில் மரக்கன்றுகளை நட நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுபோன்று செய்வதன் நாம் பழையபடி மழை வளம் பெறலாம். இதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்,'' என்றனர்.

## வேளாண் துறையில் அறுவடை பரிசோதனை தொழில்நுட்ப பணிக்கு விண்ணப்பிக்க அழைப்பு சென்னையில் நாளை நடக்கிறது

தர்மபுரி, : தர்மபுரி மாவட்ட நிர்வாகம் விடுத்துள்ள செய்தி: தர்மபுரி மாவட்டத்தில் பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் , பயிர் அறுவடை பரிசோதனைகளை மேற்கொள்ள தகுதி வாய்ந்த பணியாளர்கள் தற்காலிக ஒப்பந்த அடிப்படையில் பணிதேர்வு முகமை (பிளேஸ்மென்ட் ஏஜென்சி) மூலம் நிரப்பப்பட உள்ளன.
இந்த பணியிடத்திற்கு 3 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். ஒப்பந்த அடிப்படையில் தேர்வு செய்யப்படுபவர்கள் பயிர் அறுவடை சோதனை, தளைகளின் தேர்வு பணி , அறுவடைப்பணி மற்றும் அதன் சார்ந்த பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

இப்பணிக்கு வேளாண்மை இளநிலை பட்டப்படிப்பு அதனுடன் கணினி இயக்க திறன் பெற்றிருக்க வேண்டும். வேளாண்துறை மற்றும் புள்ளியியல் துறையில் பணிபுரிந்து இப்பணியை மேற்கொள்ள ஓய்வு பெற்ற அலுவலர்களும் தேர்வு செய்ய பரிசீலிக்கப்படுவர்.

தேர்ந்தெடுக்கப்படும் பணியாளர்களுக்கு மாதாந்திர தொகுப்பூதியமாக ரூ.10 ஆயிரம் பணித்தேர்வு முகமை மூலம் வழங்கப்படும். எனவே இந்த பணிகளை மேற்கொள்ள தகுதியுள்ள பதிவு துறைகளின் மூலம் பதிவு செய்து செயல்பட்டு வரும் பணி நியமன முகமையின் (பிளேஸ்மென்ட் ஏஜென்சி) அடிப்படை விபரம் மற்றும் பணியாளர்களை தேர்வு செய்து வழங்க சேவை கட்டணம் ஆகியவற்றை வரும் 22ம் தேதி மாலை 5 மணிக்குள் வேளாண் இணை இயக்குனர் , கலெக்டர் அலுவலகம் பின்புறம், தர்மபுரி 636705 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தக்காளி விலை வீழ்ச்சியால் தோட்டத்திலேயே அழுகும் பரிதாபம்

வேப்பனஹள்ளி, : தக்காளி விலை வீழ்ச்சியால் வேப்பனஹள்ளி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் தக்காளியை பறிக்காமல் விளை நிலங்களிலேயே விட்டுள்ளதால் அழுகி விணாகி வருகிறது. வேப்பனஹள்ளி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் தக்காளி பயிரிட்டுள்ளனர். இங்கு , விளைவிக்கப்படும் தக்காளி கிருஷ்ணகிரி , சென்னை, பாண்டிச்சேரி உள்ளிட்ட பகுதிகளுக்கு விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. இந்நிலையில் , கடந்த ஒரு மாதமாக தக்காளி விலை வீழ்ச்சியடைந்து வருகிறது. 15 கிலோ கொண்ட ஒரு கூடை தக்காளி ₹40க்கு விற்பனையாகி வருகின்றது.

விலை குறைந்ததன் காரணமாக அறுவடை கூலிக்கு கூட கட்டுப்படியாகாததால் தக்காளியை விளை நிலங்களிலேயே விடுவது வாடிக்கையாக உள்ளது. இதன் காரணமாக ஆயிரக்கணக்கான ஏக்கரில் தக்காளி அழுகும் நிலை காணப்படுகிறது. சிலர் , தக்காளி தோட்டத்தில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு விட்டு வருகின்றனர். விலை வீழ்ச்சியால் தக்காளியை பறிக்காமல் தோட்டங்களிலேயே அழுகி வருவதால் விவசாயிகள் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளனர்.

## நோய் பரவும் அச்சம் புழுதேரி வேளாண்மை அறிவியல் மையத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி

கரூர், : புழுதேரி வேளாண்மை அறிவியல் மையத்தில் பயிற்சி முகாம் நடைபெற்றது. ஒருங்கிணைப்பாளர் திரவியம் தலைமையில் நடைபெற்ற இந்த ஒரு நாள் பயிற்சி முகாமில் , தாந்தோணி வட்டாரத்தில் இருந்து 50 தோட்டக்கலை விவசாயிகள் கலந்து கொண்டனர். தோட்டக்கலை உதவி இயக்குநர் (பொ) நடராஜன் வரவேற்றார். இந்த பயிற்சியில் , தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்வதற்கு ஏதுவாக உள்ள மண்வளம் , வறட்சி நேரங்களில் பயிர்களை பராமரிப்பது எப்படி என்பது குறித்தும் ,

தோட்டக்கலை பயிர்களான பழவகைகள், காய்கறிகள், பூக்கள், நறுமணப் பயிர்கள், தோட்டப்பயிர்கள், மூலிகை பயிர்கள் பாதுகாப்பு , தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் , உயர் தொழில்நுட்ப உற்பத்தி பெருக்குத் திட்டம் மற்றும் நுண்ணீர் பாசனம் , கால்நடைகளை வளர்ப்பது, அசோலா உற்பத்தி போன்றவை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் , தொழில்நுட்ப அலுவலர் மாரிக்கண்ணு , தமிழ்செல்வி உட்பட அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டு பேசினர். பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு புழுதேரி வேளாண் அறிவியல் மைய நிர்வாகிகள் பயிற்சி அளித்தனர். உதவி தோட்டக்கலை அலுவலர் கல்யாணசுந்தரம் நன்றி கூறினார்.

## க.பரமத்தியில் முருங்கைக் காய்கள் சந்தைக்கு வராமல் தடுக்கும் இடைத்தரகர்கள்

க.பரமத்தி, : க.பரமத்தி கடைவீதியில் காவல்நிலையம் எதிரே செவ்வாய்கிழமைதோறும் வாரச்சந்தை கூடுகிறது. சந்தைக்கு சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த சிறு , குறு வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் கடைகள் போட்டு மொத்தமாகவும் , சில்லரையாகவும் வியாபாரம் செய்து வருகின்றனர். இங்கு சந்தையில் சுற்று வட்டார கிராம மக்கள் தேவையான பொருட்களை வாங்கி பயனடைந்து வருகின்றனர். க.பரமத்தி சுற்று வட்டார பகுதிகளில் முருங்கை சாகுபடி விவசாயம் அதிக அளவில் நடக்கிறது. முருங்கையில் 3 வகைப்படும். அவை செடி முருங்கை, கொடி முருங்கை மற்றும் மர முருங்கை. ஆகியவற்றை வியாபாரிகள் மூலம் கொள்முதல் செய்யப்படும் முருங்கை காய்களை 20, 30 மற்றும் 40 காய்களை கொண்ட கட்டுகளாக்கி விற்பனைக்கு தமிழகம் மட்டுமன்றி, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, போன்ற மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

விவசாயிகள் நிலத்தில் அறுவடை செய்த முருங்கைகாய்களை விற்பனைக்காக சந்தைக்கு இரண்டு சக்கர வாகனங்களில் கொண்டு வருவது வழக்கம் இவற்றை உள்ளுர் வெளியூர் வியாபாரிகள் விவசாயிகளிடமிருந்து முருங்கைக் காய்களை வாங்க போட்டி போட்டுக் கொண்டு விவசாயிகள் வாகனங்களை சந்தைக்குள் வர விடாமல் தடுத்து தேசிய நெடுஞ்சாலையிலேயே பேரம் பேசுகின்றனர். இதனால் காலை 7 மணி முதல் 11மணி கரூர் -கோவை வழித்தடத்தில் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டு வருகிறது. இதனால் க.பரமத்தி அரசு மேல்நிலைப்பள்ளிக்கு செல்லும் ஆயிரக்கணக்கான பள்ளி மாணவர்களும் வாகன நெருக்கடியில் சிக்கி தவிக்க வேண்டியதிருக்கிறது. எனவே கரூர்-கோவை தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் முருங்கைக்காய் இடை தரகர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வாகன ஓட்டிகள் எதிர்பார்க்கின்றனர்.

## 23ம் தேதி விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம்

கரூர், : கரூரில் வரும் 23ம் தேதி விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் நடக்கிறது. கரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும்நாள் கூட்டம் வரும் 23ம்தேதி (வெள்ளி) கால 11 மணிக்கு கரூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டஅரங்கில் நடக்கிறது. கரூர் மாவட்ட விவசாயிகள் , விவசாய சங்க உறுப்பினர்கள், அனைவரும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த மனுக்கள் மட்டும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என மாவட்ட நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோடியக்காட்டில் கசப்பில்லாத பழு பாகற்காய் விளைச்சல் அமோகம்

வேதாரண்யம், : கோடியக்காட்டில் கசப்பில்லாத பழு பாகற்காய் விளைச்சல் அமோகமாக உள்ளது. வேதாரண்யம் தாலுக்கா

கோடியக்கரையில் 25 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் கோடியக்காடு அமைந்துள்ளது. இந்த காட்டில் 154 மூலிகை செடிகள் உள்பட 271 வகையான தாவரங்கள் உள்ளது. இதில் பலா , நாவல், கருந்துவரை, வாசா, காசான் போன்ற மரங்களும் உள்ளன. இந்த காட்டில் 17 சதவீத மரங்களும் 43 சதவீதம் மூலிகைகளும் 25 சதவீதம் புதர்களும் 16 சதவீதம் கொடிகளும் உள்ளன. கொடி வகையை சேர்ந்த பழு பாகற்காய் என்று அழைக்கப்படும் கசப்பில்லாத பாகற்காய் அதிகளவில் விளைகிறது. இயற்கையாக விளையும் பாகற்காய்களை முன்பெல்லாம் ஆதிவாசிகள் , பறித்து விற்பனைக்கு கொண்டு வந்தார்கள். சில ஆண்டுகளாக வனத்துறையினர் இந்த பாகற்காய்களை எடுத்து செல்ல அனுமதிக்காமல் அங்குள்ள பறவைகளுக்கு பயன்படும் வகையில் பாதுகாத்து வருகிறார்கள். இந்த பழுபாகற்காயை இறால் , மாமிசத்துடன் சேர்த்து அசைவ பிரியர்கள் சமையத்து உண்பார்கள். சைவ பிரியர்களும் இதை சாம்பார் மற்றும் வறுவல் செய்து சாப்பிடுகிறார்கள். வேதாரண்யம் காய்கறி கடைகளில் கிலோ ரூ.100 முதல் 120 விற்கப்படுகிறது. தற்போது விவசாயிகள் தங்கள் வீடுகளில் வளர்க்கும் பழுபாகற்காய் தோட்டத்திற்கு செயற்கை உரம் மற்றும் மருந்து அடிப்பதால் அதன் இயற்கையான தன்மையை இழந்து வருகிறது.

## போலி முட்டைகள் விற்கப்படுகிறதா ?: உணவு பாதுகாப்பு அலுவலர்கள் ஆய்வு

தஞ்சை, : தஞ்சை கலெக்டர் அண்ணாதுரை அறிவுரையின் பேரில் தஞ்சை மாவட்ட உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை மாவட்ட நியமன அலுவலர் டாக்டர் ரமேஷ்பால தலைமையில் உணவு பாதுகாப்பு அலுவலர்கள் சந்திரமோகன் , மகேஷ், கவுதமன், கிருஷ்ணமூர்த்தி, விஜயகுமார், கார்த்திக், வடிவேல், பாண்டி, உமோகேசன், செந்தில் ஆகியோர் கொண்ட குழுவினர் தஞ்சையில் உள்ள முட்டை கடைகளில் நேற்று ஆய்வு நடத்தினர். தஞ்சை கீழவாசல், காவேரி

நகர் உள்ளிட்ட இடங்களில் உள்ள 108க்கும் அதிகமான முட்டை விற்பனை நிலையங்களில் போலி முட்டைக்ள விற்பனை செய்யப்படுகிறதா என்று ஆய்வு செய்தனர். தஞ்சை மாவட்டம் முழுவதும் போலி முட்டைகள் விற்பனை செய்யப்படுகிறதா என்று தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் யாரேனும் போலியான முட்டைகள் விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் மீது உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய சட்ட பிரிவுகள் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

## எருக்கூர் கிராமத்தில் விவசாயிகளுக்கு கிராம திட்ட பயிற்சி

கொள்ளிடம்,: நாகை மாவட்டம் கொள்ளிடம் அருகே எருக்கூர் கிராமத்தில் வேளாண்மைத்துறை விரிவாக்க திடடங்களின் உறுதுணை சீரமைப்புத்திட்டத்தின் (அட்மா) கீழ் நெல்லில் விதை கிராமத்திட்ட பயிற்சி நேற்று நடைபெற்றது. வட்டார வேளாண் உதவி இயக்குநர் அப்பன்ராஜ் தலைமை வகித்தார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் ரேகா வரவேற்றார். சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக உழவியல்துறை உதவி பேராசிரியர் பாபு கலந்து கொண்டு சான்று விதை உற்பத்தியில் விதைத்தேர்வு மற்றும் தொழில்நுட்பங்கள் விதை உற்பத்தி செய்தல் , கலவன் நீக்குதல் , வயல் ஆய்வு செய்தல் குறித்து விளக்கமளித்தார். நிகழ்ச்சியில் 40 விசாயிகள் கலந்து கொண்டனர்.

## பருவமழை பொய்த்ததால் காய்ந்துபோன மானவாரி பயிர்

விருதுநகர்,: பருவமழை பொய்த்ததால் காய்ந்துபோன மானவாரி பயிர்களுடன் கலெக்டர் அலுவலகத்திற்கு வந்த விவசாயிகள் , நிவாரணம் கோரி மனு அளித்தனர்.தமிழகம் முழுவதும் பருவமழை பொய்த்து விட்ட நிலையில் வறட்சி மாநிலமாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கை எழுந்து வருகிறது. இதை வலியுறுத்தி அனைத்து மாவட்டங்களிலும் விவசாயிகள் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.

விருதுநகர் மாவட்டத்தில் சராசரி மழையளவான 820 மி.மீட்டரில், இது வரை சுமார் 390 மி.மீ மழை மட்டும் பதிவாகி உள்ளது. 50 சதவீத மழைகூட பதிவாகாத நிலையில் மாவட்டம் முழுவதும் வறட்சி தாண்டவாமாடுகிறது. அணைகள் , கண்மாய்கள் வறண்டு கிடக்கின்றன. கிணறுகளில் தண்ணீர் அதலபாதளாத்திற்குச் சென்றுவிட்டது. ஏப்ரல் , மே மாதங்களில் வரவேண்டிய தண்ணீர் பஞ்சம் தற்போதே தலைதூக்க ஆரம்பித்து விட்டது.

சாத்தூர் அருகே உள்ள ஒத்தையால் , ஓ.மேட்டுப்பட்டி, தெற்குப்பட்டி அய்யம்பட்டி, தெக்கூர், சடையம்பட்டி, சத்திரப்பட்டி கிராம சுற்றுப்பகுதிகளில் சுமார் 10 ஆயிரம் ஏக்கரில் பருத்தி , மக்காச்சோளம், உளுந்து, பாசிப்பயறு, சோளம், கம்பு மானவாரியாக சாகுபடி செய்திருந்தனர். நவம்பர் , டிசம்பர் மாதங்களில் சாரல் மழைகூட பெய்யாததால் மானவாரி பயிர்கள் அனைத்தும் கருகி வருகின்றன. கருகிய பயிர்களுடன் கலெக்டர் அலுவலகம் வந்த ஓ.மேட்டுப்பட்டி , ஒத்தையால், தெற்குபட்டி விவசாயிகள் கூறியதாவது: மானவாரிப் பயர்களுக்கு கடந்த அக்டோபர் , நவம்பர் மாதங்களில் பயிர்க் காப்பீடு பிரிமியம் செலுத்தி உள்ளோம்.

ஓ.மேட்டுப்பட்டி தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் பயிர்க் காப்பீட்டுக் கட்டணம் மட்டும் வசூலித்துள்ளனர்.

ஆனால், அதற்கான ஆவணங்கள் எதுவும் பூர்த்தி செய்து பெறப்படவில்லை.மானாவாரி விவசாயத்தை நம்பி ஆயிரக்கணக்கான குடும்பங்களும், கூலித் தொழிலாளர்களும் உள்ளனர். பயிர்கள் கருகியதால் வேலை இழப்பும் , உற்பத்தி இழப்பும் ஏற்பட்டுள்ளது. பயிர்கள் அனைத்தும் கருகி வருகின்ற நிலையில் ஒவ்வொரு விவசாயக் குடும்பத்திற்கும் ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரம் வரை இழப்பு ஏற்பட்டுள்ளது.

இதை கிராம நிர்வாக அலுலகர்கள் முறையாக ஆய்வு செய்து கணக்கெடுப்பு நடத்தி ஏக்கருக்கு ரூ. 30 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## ஐகோர்ட் கிளை உத்தரவு டிச.23ல் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

விருதுநகர்,: விருதுநகர் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் டிச. 23ம் தேதி நடைபெறுகிறது. காலை 11 மணியளவில் நடைபெறும் கூட்டத்துக்கு கலெக்டர் சிவஞானம் தலைமை வகிக்கிறார். விவசாயிகள் விவசாயம் தொடர்பான கோரிக்கை மனுக்களை கலெக்டரிடம் நேரில் அளித்துப் பயன்பெறலாம். இத்தகவலை வேளாண் இணை இயக்குநர் குருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## 2,528 மூட்டை பருத்தி 50 லட்சத்துக்கு ஏலம்

ராசிபுரம், : ராசிபுரம் கூட்டுறவு வேளாண்மை விற்பனை கூடத்தின் (ஆர்.சி.எம்.எஸ்) சார்பில் கவுண்டம்பாளையத்தில் நேற்று பருத்தி ஏலம் நடந்தது. இதில் ராசிபுரம் , புதுப்பாளையம், பட்டணம், வடுகம், பூசாரிபாளையம், சிங்களாந்தபுரம், நத்தமேடு, கண்ணூர்பட்டி, கவுண்டம்பாளையம், சீராப்பள்ளி உள்ளிட்ட பல்வேறு பகுதியை சேர்ந்த விவசாயிகள் தங்களது விளைநிலங்களில் உற்பத்தி செய்த 2,528 பருத்தி மூட்டைகளை ஏலத்திற்கு கொண்டு வந்திருந்தனர். இதை கொள்முதல் செய்த, அவிநாசி, அன்னூர், சேலம், கொங்கணாபுரம், இடைப்பாடி ஆத்தூர், தேனி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த வியபாரிகள் வந்திருந்தனர். இதில் ஆர்சிஹெச் அதிகபட்சமாக 5,789க்கும், குறைந்தபட்சமாக 5,273க்கும், டிசிஹெச் அதிக பட்சமாக 6,756க்கும், குறைந்தபட்சமாக 6,395க்கும் ஏலம் போனது. இதன்மூலம் 2,528 பருத்தி மூட்டை, ₹50 லட்சத்துக்கு விற்பனையானது.

## 18 டன் செவ்வந்தி பூக்கள் குப்பையில் கொட்டப்பட்டது விவசாயிகள் வேதனை

திருச்சி, : வரத்து அதிகமானதால் 鐠ரங்கம் பூ மார்க்கெட்டில் 18 டன் செவ்வந்தி பூக்களை விவசாயிகள் குப்பையில் கொட்டினர்.

திருச்சி 鐠ரங்கம் சாத்தார வீதியில் பூ மார்க்கெட் செயல்படுகிறது. இங்கு அனைத்து வகை பூக்களும் வெளியூர்களிலிருந்து தினமும் லாரிகளில் வருவது வழக்கம். செவ்வந்திப்பூ சேலம் , தர்மபுரி, தொப்பூர், பொம்முடி மற்றும் திருச்சி உள்ளிட்ட சுற்று வட்டாரப் பகுதிகளில் இருந்து விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. இந்நிலையில் கடந்த சில நாட்களாக செவ்வந்திபூக்கள் வரத்து அதிகமானதாலும் , விற்பனை மந்தமாக இருந்ததாலும் நேற்று சுமார் 18 டன் பூக்களை விவசாயிகள் குப்பையில் கொட்டினர்.

இதுகுறித்து பூக்கடை வியாபாரி பரமசிவம் கூறுகையில் , ஸ்ரீரங்கம் பூ மார்க்கெட்டிற்கு தினமும் 10 டன் செவ்வந்தி பூக்கள் விற்பனைக்கு வரும். சராசரியாக தினமும் 5 டன் பூக்களாவது விற்பனையாகி விடும். தற்போது வெளிமாவட்டங்களில் இருந்து தினமும் 20டன் செவ்வந்திப்பூ வருகிறது. வரத்து அதிகமாக வருவதால் பூ விலை குறைந்தது. அதனால் நேற்று காலை செவ்வந்திப்பூ கிலோ ரூ. 5க்கு விற்பனை செய்யப்பட்டது. பூக்களை இலவசமாக கொடுத்தும் யாரும் எடுத்து செல்லவில்லை. நேற்று சுமார் 2 டன் செவ்வந்திப் பூக்கள் மட்டுமே விற்பனையானது. மீதமுள்ள சுமார் 18 டன் பூக்களை எடுத்து செல்ல ஆள் இல்லாததால் குப்பையில் கொட்டப்பட்டது என்றார்.

இதுகுறித்து தர்மபுரி மாவட்டம் தொப்பூரை சேர்ந்த மலர் சாகுபடி விவசாயி முருகன் கூறுகையில் , செவ்வந்திப்பூ சாகுபடி செய்யும் போது எப்போதும் 2 ஏக்கருக்கு சாகுபடி செய்தால் பருவமழை பெய்து ஒரு ஏக்கர்

பூக்கள் அழுகி ஒரு ஏக்கர் பூக்கள் தான் கிடைக்கும். ஆனால் இந்தாண்டு செவ்வந்திப்பூ சாகுபடி செய்த பின்னர் பருவமழை பொய்த்ததால் நட்ட பயிர்கள் அனைத்தும் முளைத்து முழு சாகுபடியை எட்டியது. இதனால் பூக்கள் வரத்து அதிகமானது. ஆனால் பூக்களை வாங்கவே ஆளில்லை. ஒரு ஏக்கரில் செவ்வந்திப்பூ சாகுபடி செய்ய ரூ. 3லட்சம் செலவானது. பின்னர் பூக்களை பறிக்க ரூ. 2 லட்சம் செலவானது. ஸ்ரீரங்கம் பூ மார்க்கெட்டிற்கு 3டன் பூக்கள் கொண்டு வந்தேன். அதற்கு லாரி வாடகை ரூ.12ஆயிரம் செலவானது. தற்போது பூக்கள் விற்பனை ஆகாததால் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இந்த நஷ்டத்தை கடனை வாங்கிதான் சரிசெய்ய வேண்டும் என்றார்.

## பயிர் வளர்ச்சிக்கு பயன்படும் பாஸ்போ பாக்டீரியா நுண்ணுயிர் விவசாயிகளுக்கு விளக்கம்

பட்டுக்கோட்டை, : திருவோணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன் வெளியிட்டுள்ள அறிக்கை:

மண்ணில் பயிர்களுக்கு கிடைக்காத நிலையில் இருக்கும் மணிச்சத்தை கரைத்து தாவரங்கள் எளிதில் எடுத்து கொள்ளக்கூடிய நிலைக்கு மாற்றி தருவதில் மிக முக்கிய பங்காற்றுவது பாஸ்போ பாக்டீரியா நுண்ணுயிர் ஆகும். பாஸ்போ பாக்டீரியா பொதுவாக மண்ணிலும் , வேர் பகுதியை சுற்றிலும் ஏராளமாக இருக்கின்றன. ஒரு கிராம் மண்ணில் 10 லட்சம் முதல் 25 லட்சம் பாக்டீரியாக்கள் இருக்கின்றன. நிலத்தில் இடப்படும் மணிச்சத்து உரத்திலுள்ள பாஸ்பரஸ் முழுவதும் பயிர்களுக்கு கிடைப்பதில்லை. 10 முதல் 15 சதவீதம் மட்டுமே பயிர்களுக்கு பயன்படுகிறது. மற்றவை சுண்ணாம்பு , அலுமினியம் மற்றும் இரும்பு தாதுக்களுடன் சேர்ந்து பயிருக்கு கிடைக்காத நிலைக்கு மாறிவிடுகிறது.

இம்மாதிரியான சூழ்நிலையில் பாஸ்போ பாக்டீரியா நுண்ணுயிர் ஆக்ஸாலிக், சிட்ரிக், டார்டாரிக், மாலிக், பியூமெரிக், பார்மிக், லாக்டிக்,

அசிட்டிக், சக்சினிக் போன்ற அங்கக அமிலங்களை உற்பத்தி செய்து கிட்டாத நிலைக்கு மாறிவிட்ட மணிச்சத்தை கரைத்து பயிர்கள் எடுத்து கொள்ளும் நிலைக்கு கொண்டு வருகிறது. பாஸ்போ பாக்டீரியாவை அசோஸ்பைரில்லம் நுண்ணுயிர் போலவே நெற்பயிரில் விதை நேர்த்தி செய்வதற்கு ஒரு பொட்டலமும் ( 200 கிராம்) நாற்று விட்டு நடவு செய்யும் பயிர்களுக்கு நாற்றின் வேரை நனைக்க 2 பொட்டலமும் ( 400 கிராம்), நடவு வயல் (அல்லது) நேரடி விதைப்பு செய்யும் நிலத்துக்கு ஒரு ஏக்கருக்கு 4 பொட்டலம் ( 800 கிராம்) வீதமும் பயன்படுத்த வேண்டும். பாஸ்போ பாக்டீரியா பயன்படுத்துவதால் 60 சதவீதத்துக்கும் மேலாக ரசாயன மணிச்சத்து உரம் இடுவதை மிச்சப்படுத்தலாம். அதிகளவில் வேர் முடிச்சுகளை தோற்றுவிப்பதால் தழைச்சத்தை கிரகிக்கும் ஆற்றலை அதிகரிக்கிறது. வேர் முடிச்சு மற்றும் வேர் வளர்ச்சி அதிகரிப்பதால் அதிக தூர்கள் மற்றும் கிளைகள் வெடிக்கிறது. இதனால் மகசூல் கூடுதலாக கிடைக்கிறது. பாஸ்போ பாக்டீரியா , அசோஸ்பைரில்லம் மற்றும் ரைசோபியம் நுண்ணுயிருடன் இணைந்து செயல்படும்போது அதிகமான பலனை கொடுக்கிறது.

தினமணி

**பணத் தட்டுப்பாடு: அறுவடைக்கு பாரம்பரிய வழிமுறையைக் கையாளும் விவசாயிகள்**



ரூபாய் நோட்டு வாபஸைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள பணத் தட்டுப்பாடு காரணமாக, ஒடிஸா மாநிலத்தின் கடலோர மாவட்டங்களில் விவசாயிகள் ஒன்றிணைந்து, பாரம்பரிய முறைப்படி, தங்களுக்கிடையே உழைப்பைப் பரிமாறிக் கொண்டு அறுவடையைத் தொடங்கியுள்ளனர். ஜகத்சிங்பூர் மாவட்டத்தில் உள்ள கோடா கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஜுகல் கிஷோர் லெங்கா. இவரது வயலில் நெற்பயிர்கள் விளைந்து அறுவடைக்குத் தயாரான நிலையில் உள்ளன. ஆனால், பணத் தட்டுப்பாடு காரணமாக, விவசாயக் கூலித் தொழிலாளர்களை வைத்து, அறுவடை செய்ய முடியாமல் தவித்து வருகிறார். இதேபோல், அதே கிராமத்தைச் சேர்ந்த சுதம் சாஹு என்ற விவசாயியும்,

கூலித் தொழிலாளர்களை வைத்து அறுவடை செய்ய முடியாமல் தவித்து வருகிறார்.

இந்நிலையில், இவர்கள் இருவரும் இணைந்து தங்களது வயலில் அறுவடையை முடிப்பதற்கு முடிவு செய்துள்ளனர். இதுதொடர்பாக, ஜுகல் கிஷோர் லெங்கா கூறியதாவது:
எங்கள் இருவரிடமும் தற்போது தலா 4 விவசாயத் தொழிலாளர்கள் உள்ளனர். அவர்களை வைத்துதான் விவசாயப் பணிகளை மேற்கொண்டு வந்தோம். பணத் தட்டுப்பாடு காரணமாக, அவர்களை வைத்து எங்கள் இருவரது வயல்களிலும் மாறிமாறி அறுவடை செய்வதற்கு முடிவு செய்துள்ளோம் என்றார் அவர்.

இதேபோல், கேந்திரபாரா மாவட்டத்தில் முகுந்த் பெஹரா என்ற விவசாயி, கோகுலி ரௌத் என்ற விவசாயியுடன் இணைந்து அறுவடைப் பணியை முடிக்க உள்ளார். இதுதொடர்பாக, முகுந்த் பெஹரா கூறியதாவது:

வழக்கமாக, நெல் அறுவடைக்கு கூலித் தொழிலாளர்களை அமர்த்துவோம். இந்த ஆண்டு நல்ல மகசூல் கிடைத்துள்ளது. உரிய நேரத்தில் அறுவடை செய்யாவிட்டால், மிகப்பெரிய அளவில் எங்களுக்கு இழப்பு ஏற்பட்டு விடும். மத்திய அரசின் ரூபாய் நோட்டு வாபஸ் நடவடிக்கையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளோம். அறுவடைக்குப் போதிய பணமில்லாததால், கூலித் தொழிலாளர்களை பணியில் அமர்த்த முடியவில்லை. எனவே, விவசாயிகள் இணைந்து

ஒருவருக்கொருவர் உதவி செய்து, அறுவடையை முடித்து வருகிறோம் என்றார் அவர்.

இதுதொடர்பாக, வேளாண்துறை இணை இயக்குநர் பிரஃபுல்லா மிஸ்ரா கூறுகையில், "ஒரு விவசாயி, மற்றொரு விவசாயியின் வயலில் கூலி எதுவும் வாங்காமல் வேலை செய்துவிட்டு, பதிலுக்கு அந்த விவாசயியின் உழைப்பைப் பெறும் முறை பழங்காலத்தில் நடைமுறையில் இருந்தது. அதை மீண்டும் விவசாயிகள் பின்பற்றத் தொடங்கியுள்ளனர் என்றார் அவர்.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் விநியோகம்**

பரங்கிப்பேட்டை வட்டாரத்தில் வேளாண் துறை மூலம் விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் விநியோகிக்கப்படுகிறது என வேளாண் உதவி இயக்குநர் சு.ரமேஷ் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: விசைத்தெளிப்பான், பேட்டரி தெளிப்பான், ரோட்டவேட்டர் கலப்பை, நேரடி நெல் விதைப்பு செய்யும் கலப்பை (நங்ங்க் ஈழ்ண்ப்ப்), தெளிப்பு நீர் பாசனக் கருவிகள், நீர் கடத்தும் குழாய்கள் ஆகியவை விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில், பின்னேற்பு மானியமாக விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

வேளாண் துறை அங்கீகரித்துள்ள விற்பனையாளரிடம் கருவிகளை விவசாயிகள் முழுவிலை கொடுத்து கொள்முதல் செய்துகொண்டு, பட்டியல், ஆதார் நகல், வங்கி புத்தக நகல், புகைப்படத்துடன் கூடிய விண்ணப்பம் ஆகியவற்றை அளித்தால், மானியத் தொகை கருவூலம்

மூலம் விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். தெளிப்பு நீர் பாசனக் கருவிகள், நீர் கடத்தும் குழாய்கள் ஆகியவற்றை மானியத்தில் பெறுவதற்கு விவசாயிகள் சிட்டா, அடங்கல், ஆழ்குழாய் கிணறு, வயலின் வரைபடம் (ஊஙஆ நகல்), புகைப்படத்துடன் கூடிய விண்ணப்பம், வங்கி வரைவோலை ஆகியவற்றை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும். எனவே, மானியம் தேவைப்படும் விவசாயிகள் வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தில் முன்பதிவு செய்துகொள்ள வேண்டும் என அதில் குறிப்பிட்டுள்ளார்.

**பிரதமர் பயிர்க் காப்பீடுத் திட்டம் அமல்: டிசம்பர் 23-க்குள் விண்ணப்பிக்கலாம்**

மத்திய அரசின் பிரதமர் பயிர்க் காப்பீடு திட்டம் புதுச்சேரி மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான அறிவிக்கையை மாநில அரசு வெளியிட்டுள்ளது.

இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெற, விவசாயிகள் வருகிற டிசம்பர் 23ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் நடப்பு சம்பா பருவம் முதலும், ஏனாம் பகுதியில் காரிப் ஃராபி பருவம் முதலும், பிரதமர் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் (டஙஊஆவ) நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் புதுச்சேரியில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ள அனைத்து வருவாய் கிராமங்களிலும் நெல், கரும்பு, பயறு வகைகள், பருத்தி ஆகிய பயிர்களுக்கும், ஏனாம் பகுதியில் நெல் பயிருக்கும் யுனைட்டெட் இந்தியா

இன்சூரன்ஸ் நிறுவனம் முலம் பயிர்க் காப்பீடு செய்யப்படும். மேலும், காரைக்கால் பகுதியில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ள அனைத்து வருவாய் கிராமங்களிலும் நெல், பயறு வகைகள், பருத்தி ஆகிய பயிர்களுக்கும் அக்ரிகல்சுரல் இன்சூரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா லிட் நிறுவனம் மூலம் பயிர்க் காப்பீடு செய்யப்படும். வங்கிகளில் விவசாயக் கடன் பெற்றுள்ள விவசாயிகளுக்கு அந்தந்த வங்கிகளில் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டு, இத்திட்டத்தில் சேர்ந்திட பதிவு செய்யப்படும். விவசாயக் கடன் பெறாத இதர விவசாயிகள் அனைவருக்கும் வேளாண் துறையின் உழவர் உதவியகங்கள் மூலம் விண்ணப்பங்கள் வழங்கப்பட்டு பதிவு செய்யப்படும்.

பிரீமியத்தை அரசே செலுத்தும்: மேலும், இத்திட்டத்தில் விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரீமியம் தொகை முழுவதையும் புதுச்சேரி அரசே செலுத்தும். இத்திட்டத்தின் கீழ் புதுச்சேரி பகுதியில் நிகழ் சம்பா நெல்பயிருக்கு ஹெக்டருக்கு ரூ.44,000 காப்பீட்டுத் தொகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதற்குண்டான பிரீமியம் தொகை ரூ.3850-இல் விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரிமீயம் தொகையான ரூ.660-யும் மாநிலத்தின் மானியத் தொகையான ரூ.1595-ம் புதுச்சேரி அரசே ஏற்றுக்கொள்ளும். மீதம் உள்ள ரூ.1595-ஐ மத்திய அரசு மானியமாக வழங்கும். இதனால் அனைத்து விவசாயிகளும் பதிவு செய்யப்பட்டு அவர்கள் சாகுபடி செய்துள்ள பயிர்களுக்கு காப்பீடு செய்யப்படும்.

23-க்குள் பதிவு செய்ய வேண்டும்: எனவே, இந்த பயிர் காப்பீட்டு

திட்டத்தில் சேர்ந்து பயன் பெற்றிட விவசாயிகள் அனைவரும் அருகில் உள்ள உழவர் உதவியகங்கள் மூலம் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று 23.12.2016 க்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும் என வேளாண் துறை தெரிவித்துள்ளது.

தி இந்து
தமிழால் இணைவோம்

**துறை அறிமுகம்: நிபுணர்களுக்கு வாய்ப்பளிக்கும் வங்கித் துறை**




பண மதிப்பு நீக்கம் என்கிற விவகாரம் பூதாகாரமாக உருவெடுத்த பிறகு வங்கியை நினைக்காத நாளில்லை. தினந்தோறும் வங்கியைத் தேடித் தேடிச் செல்வதாகிவிட்டது. அதே போலச் சமீப காலமாக வங்கித் துறையில் அதிக எண்ணிக்கையில் பணி நியமனத்துக்கான அறிவிப்புகளும் அழைப்புகளும் வந்துகொண்டே இருப்பதைக் கவனித்திருப்பீர்கள்.

**அறிந்ததும் அறியாததும்**

முன்பை விடவும் தற்போது வணிகத் துறை அதன் கிளைகளை விஸ்தாரமாகப் பரப்பிவருகிறது. பொதுவாக வங்கி வேலை என்றதுமே எழுத்தர், காசாளர், மேலாளர் போன்ற சில பதவிகள் மட்டும்தான் நினைவுக்கு வரும். அதேபோல வங்கியின் செயல்பாடுகளைப் பணச் சேமிப்பு, கடன் பெறுவது இப்படிச் சில நடவடிக்கைகளுடன் மட்டுமேதான் தொடர்புபடுத்திக்கொள்கிறோம். ஆனால், வங்கித் துறையில் ஏகப்பட்ட பணிகள் உள்ளன.

சந்தைப்படுத்துதல், பாதுகாப்பு, பொறியியல் தொழில்நுட்பம், சட்டம், ஆபத்து மேலாண்மை, நிதி, மனிதவள மேலாண்மை, பொருளாதாரம், தகவல் தொழில்நுட்பம் இப்படி நிபுணத்துவம் சார்ந்த பல பணிகள் வங்கித் துறையில் இருக்கின்றன. அனைத்துப் பட்டதாரிகளும் புரொபேஷனரி அதிகாரி வேலைக்கு விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள்தான். ஆனால், மேலே குறிப்பிட்ட பணிகளுக்குத் தனித்துறை வல்லுநர்கள் மட்டுமே நியமிக்கப்படுகின்றனர். வங்கித் துறையின் சில தனித்துறைப் பணிகளின் தன்மையை இப்போது பார்ப்போம்.

**மார்க்கெட்டிங் அதிகாரி**

சந்தைப்படுத்துதலுக்கு இன்று அத்தனை துறைகளும் முக்கியத்துவம் தருகின்றன. பொதுத்துறை வங்கிகளும் இந்தப் போட்டியில் இணைந்துவிட்டன. வங்கியின் சிறப்புத் திட்டங்களை மக்களிடம் எப்படிக் கொண்டுசேர்ப்பது என்பதை ஆராயும் பணி இது. சந்தை நிலவரத்துக்கு ஏற்ப வங்கியில் புதிய வசதிகளை ஏற்படுத்துவதற்கான கருத்துகளை மார்க்கெட்டிங் அதிகாரிகள் வழங்குவார்கள். வங்கி நிறுவனத்துக்கும் பொதுமக்களும் இடையில் வேலை பார்ப்பவர்கள் இவர்கள். எம்.பி.ஏ.,

எம்.எம்.எஸ்., அல்லது மேலாண்மையில் முதுகலைப் பட்டயம் பெற்றவர்கள் இதற்குத் தகுதியானவர்கள்.

**சட்ட அதிகாரி**

வங்கி தரப்பிலான வழக்குகளை முன்னெடுப்பவர் சட்ட அதிகாரி. குறிப்பாக வாராக் கடன்களைச் சட்ட ரீதியாக வசூலிக்கச் சட்ட ஆலோசனை வழங்கி வங்கி சார்பில் ஆஜராவது இவர்களே. இந்தப் பணியில் சேர இளங்கலை அல்லது முதுகலை சட்டம் படித்திருக்க வேண்டும். பணி அனுபவம் இந்த வேலைக்கு அத்தியாவசியம்.

**நிதி அதிகாரி**

கடன் அதிகாரி என்றே நிதி அதிகாரிகள் அழைக்கப்படுகிறார்கள். கடன் கோருபவர்களின் விண்ணப்பத்தை சீர்தூக்கிப் பார்ப்பவர்கள், அவர்களால் கடனைத் திருப்பிச் செலுத்த முடியுமா என்பதை நிர்ணயிப்பவர்கள் இவர்கள்தான். கடன் கணக்கைப் பராமரிப்பது, கடனை வசூலிப்பது உள்ளிட்ட முக்கியப் பணிகள் நிதி அதிகாரியின் பொறுப்பாகும். நிதி மேலாண்மையில் முதுகலை பட்டம் பெற்றவர்கள் இந்த வேலைக்குத் தகுதியானவர்கள். சி.ஏ., ஐ.சி.டபிள்யூ.ஏ., சி.எஃப்.ஏ. படித்தவர்களையும் சில வங்கிகள் நிதி அதிகாரிகளாக நியமிக்கின்றன.

**வேளாண்மை அதிகாரி**

தொழில்நுட்ப அடிப்படையிலான நவீன வேளாண்மையை ஊக்குவிக்கப் பொதுத்துறை வங்கிகள் பல திட்டங்களை முன்வைக்கின்றன. விவசாயக் கடனுக்குத் தகுதிவாய்ந்த விண்ணப்பங்களை மதிப்பீடு செய்யும் பொறுப்பு வேளாண்மை அதிகாரியைத்தான் சேரும். கிராம வளர்ச்சி அதிகாரி என்றும் இவர்கள் அழைக்கப்படுகிறார்கள். இப்பணிக்குத் தகுதி பெறப் பல படிப்புகள் உள்ளன.

வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, மீன்வளர்ப்பு, வேளாண்மை சந்தைப்படுத்துதல் மற்றும் கூட்டுறவு, கூட்டுறவு மற்றும் வங்கியியல், வேளாண்சார் மர வளர்ப்பு (AgroForestry), உணவு அறிவியல், வேளாண்மை உயிரித்தொழில்நுட்பம், பால் பண்ணைத் தொழில்நுட்பம், வேளாண்மை வணிக மேலாண்மை, வேளாண்மைப் பொறியியல் உள்ளிட்ட படிப்புகளில் இளங்கலைப் பட்டம் பெற்றவர்கள் வேளாண்மை அதிகாரி ஆகலாம். இத்துறைகளில் முதுகலை மற்றும் முனைவர் பட்டம் பெற்றவர்கள்கூட இப்பணியில் சேர முன்வருகின்றனர்.

**மனிதவள அதிகாரி**

ஊழியர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ள துறைகளில் ஒன்று வங்கித் துறை. சேவைத் துறை என்பதால் மனிதவளத்துக்கு இத்துறையில் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. நிறுவனங்களுடனான தொடர்பு, பயிற்சி மற்றும் வளர்ச்சித் திட்டங்கள், பணிநியமனம், ஊழியர்களின் செயல்திறனை மதிப்பிடுதல், ஊக்கத்தொகை- இழப்பீடு உள்ளிட்ட பலவற்றை நிர்வகிக்கும் பொறுப்பு மனிதவள அதிகாரிகளுடையது. மனிதவள மேலாண்மை முதுகலைப் பட்டதாரிகளும் சமூகப் பணி (எம்.எஸ்.டபிள்யூ.) முதுகலைப் பட்டதாரிகளும் வங்கியில் மனிதவள அதிகாரி ஆகலாம்.

**தகவல் தொழில்நுட்ப அதிகாரி**

இந்தியாவில் உள்ள பல்வேறும் துறைகளில் அதிவேகமாகத் தொழில்நுட்பமயமாகிவருவது வங்கித் துறை ஆகும். வங்கியில் உள்ள வன்பொருள், மென்பொருளின் செயல்பாட்டைக் கண்காணித்து ஊழியர்கள் தொழில்நுட்பத்தைத் திறம்படப் பயன்படுத்த உதவி செய்வது ஐடி அதிகாரி என்றழைக்கப்படும் தகவல் தொழில்நுட்ப அதிகாரிகளே.

இதைத் தவிரவும் டேட்டாபேஸ் நிர்வாகம் (database administration), நெட்வொர்க்கிங், தகவல் பாதுகாப்பு, மென்பொருள் வளர்ச்சி மற்றும் சோதனை போன்ற பல பொறுப்புகள் இவர்களைச் சேரும்.

கணினிப் பொறியியல், கம்ப்யூட்டர் அப்ளிகேஷன்ஸ், தகவல் தொழில்நுட்பம், எலெக்ட்ரானிக்ஸ், எலெக்ட்ரானிக்ஸ் மற்றும் தொலைத்தொடர்பு உள்ளிட்ட படிப்புகளை நான்காண்டு பட்டப் படிப்பாகவோ முதுகலைப் பட்டமாகவோ படித்தவர்கள் வங்கியில் தகவல் தொழில்நுட்ப அதிகாரி ஆகலாம்.

இவை மட்டும் அல்ல இன்னும் பல நிபுணத்துவம் வாய்ந்த பிரிவுகள் வங்கித் துறையில் உள்ளன. புரொபேஷனரி அதிகாரியாகப் பணியில் சேருபவர்கள் ஜூனியர் மேலாண்மை நிலையில்தான் (படிநிலை 1) ஆரம்பத்தில் இருப்பார்கள். அதே தனித்துறை அதிகாரிகளோ உயர் பதவிகளையும் 2,3,4 ஆகிய படிநிலைகளையும் எளிதாக அடையலாம். வங்கித் துறையின் அபரிமிதமான வளர்ச்சியினால் பலருக்கு இன்னும் பல புதிய வாய்ப்புகள் காத்திருக்கின்றன!

**திருச்சி, தஞ்சாவூர், காஞ்சிபுரம், நாமக்கல், மதுரை மாவட்டங்களில் இலவச அவசர கால்நடை மருத்துவ ஊர்திகள்: அவசர சிகிச்சைக்கு '1962'-ஐ அழைக்கலாம்**




கால்நடைகளுக்கு உயிர் காக்கும் சிகிச்சை அளிப்பதற்காக அரசால் வழங்கப்பட்டுள்ள, ஹைட்ராலிக் லிப்ட் வசதியுடன் கூடிய இலவச அவசர கால்நடை மருத்துவ ஊர்தி. படம்: ஜி.ஞானவேல்முருகன்

கால்நடைகளுக்கு உயிர் காக்கும் அவசர சிகிச்சை அளிப்பதற்காக திருச்சி, தஞ்சாவூர், காஞ்சிபுரம், நாமக்கல், மதுரை ஆகிய மாவட் டங்களுக்கு தலா 2 இலவச அவசர கால்நடை மருத்துவ ஊர்திகள் வழங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

ஊரகப் பகுதிகளில் இயங்கி வரும் நகரும் கால்நடை மருத்துவ அலகுகள் வழக்கமான கால் நடை மருத்துவ சேவைகளை மட்டுமே விவசாயிகளின் இருப் பிடங்களுக்குச் சென்று வழங்கி வருகின்றன.

**உயிர் காக்கும் சிகிச்சை**

சில நேரங்களில் கால்நடை களுக்கு அவசர சிகிச்சை தேவைப் படும். அவ்வாறு கால்நடைகளுக்கு உயிர் காக்கும் சிகிச்சை அளிப்ப தற்காக

நடமாடும் கால்நடை மருத் துவ ஊர்தி சேவைத் திட்டம் கடந்த செப்டம்பர் மாதம் அறி முகப்படுத்தப்பட்டது. இந்த திட் டத்தை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் சிகிச்சைகள் இயக்கு நரகம் செயல்படுத்தி வருகிறது.

முதல்கட்டமாக தற்போது திருச்சி, தஞ்சாவூர், காஞ்சிபுரம், நாமக்கல், மதுரை ஆகிய மாவட் டங்களுக்கு மொத்தம் ரூ.6.33 கோடி செலவில் நவீன வசதிகளுடன் கூடிய தலா இரு வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**காலை 8 - மாலை 8 மணி வரை**

இந்த வாகனங்களில் ஒரு கால்நடை மருத்துவர், கால்நடை உதவியாளர், ஓட்டுநர் ஆகியோர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். தற்போது இந்த வசதியை காலை 8 முதல் இரவு 8 மணி வரை கால்நடை வளர்ப்பவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம். இதற்கு '1962' இலவச தொலைபேசி எண்ணைத் தொடர்புகொள்ளலாம்.

இந்தத் திட்டம் குறித்து தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் சார்பில் திருச்சியில் செயல்பட்டு வரும் கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய பேராசிரியர் மற்றும் தலைவர் டாக்டர் பி.என். ரிச்சர்டு ஜெகதீசன், 'தி இந்து'விடம் கூறியதாவது:

கால்நடை வளர்ப்போர் தங்களது கால்நடைகளுக்கு தேவைப்படும் அவசர உதவிக்கு '1962' என்ற இலவச தொலைபேசி எண்ணைத் தொடர்புகொள்ளலாம். மாடுகள் கன்று ஈன இயலாமை, கருப்பை வெளித் தள்ளுதல், விஷ செடிகளை உட்கொண்டதால் ஏற்படும் பிரச் சினை, பாம்பு உள்ளிட்ட விஷ ஜந்துகள் தீண்டியதால் ஏற்படும் பாதிப்புகள், விபத்துகளால் ஏற்படும் காயம் உள்ளிட்டவைகளுக்கு கால்நடைகளின்

இருப்பிடத்துக்கே நேரடியாகச் சென்று இலவசமாக சிகிச்சை அளிக்கப்படும்.

**உபகரணங்கள், மருந்துகள்**

இந்த வாகனத்தில் அல்ட்ரா சவுண்ட் ஸ்கேனர், ஜெனரேட்டர், மாடுகளை படுத்த நிலையிலோ அல்லது நின்ற நிலையிலோ எடுத் துச் செல்ல வசதியாக ஹைட்ராலிக் லிப்ட் உள்ளிட்ட அவசர கால சிகிச்சைகளுக்குத் தேவைப்படும் அனைத்து உபகரணங்கள் மற்றும் மருந்துகள் உள்ளன.

பாதிக்கப்பட்ட கால்நடை களுக்கு நேரடியாக சிகிச்சை அளிக்கப்படும். மேல் சிகிச்சை தேவை என மருத்துவர் கருதினால், அந்த கால்நடையை அதே வாகனத் தில் எடுத்துச் சென்று அருகிலுள்ள மருத்துவமனையில் சேர்த்து தொடர் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. இந்த வாகனத்தின் மூலம் தமிழக அரசு வழங்கியுள்ள விலை யில்லா கறவை மாடுகள் மற்றும் வெள்ளாடுகளுக்கு சினைப் பருவ ஒருங்கிணைப்புத் திட்டமும் அந் தந்த மாவட்டங்களில் செயல் படுத்தப்படுகிறது.

இந்த இலவச அவசர சிகிச்சை வாகனத்தை ‘1962’ என்ற இலவச தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டு அழைக்கலாம். அவ்வாறு அழைக்கும் போது, தங்களது பெயர், தெளிவான முகவரி, கால்நடைக்கு ஏற்பட்டுள்ள பிரச் சினை ஆகியவை குறித்து முழு மையான தகவல்களை தெரிவிக்க வேண்டும்.

**அவசர காலத்துக்கு மட்டும்**

இந்தத் திட்டம் முழுமையாக அவசர காலத்தில் உதவிடும் வகை யில் செயல்படுவதால், அவசர காலத்துக்கு மட்டுமே கால்நடை வளர்ப்போர் தொடர்பு கொள்ள வேண்டும் என்றார். தொடர்ந்து, தமிழகத்தில் உள்ள

மேலும் 27 மாவட்டங்களுக்கு ரூ.37.88 கோடி மதிப்பீட்டில் இந்த திட்டம் விரிவாக்கம் செய்யப் படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

**ஆரோக்கிய ஆப்: தண்ணீர் குடிப்பதற்கு ஒரு நினைவூட்டி**

நம்ம ஊர் தட்பவெப்பத்துக்கு நிறைய தண்ணீர் குடித்தாக வேண்டும். ஒவ்வொருவரின் உடல் அமைப்புக்கு ஏற்பக் குடிக்க வேண்டிய தண்ணீரின் அளவும் மாறுபடும். நாம் ஒரு நாளைக்கு எந்த அளவு தண்ணீர் குடிக்க வேண்டும் என்பதைத் தெரிந்துகொள்வதற்காக வந்திருக்கும் ஆண்ட்ராய்ட் ஆ 'Hydro Coach - drink water'.

வேலை மும்முரத்தில் தண்ணீர் குடிப்பதற்கு மறந்துவிடுபவர்களும் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு தண்ணீர் குடிக்க வேண்டும் என்பதை ஞாபகப்படுத்தவும், எவ்வளவு தண்ணீர் குடிக்க வேண்டும் என்பதைச் சொல்லவும் இந்த 'ஆப்' பயன்படுகிறது.

**பிரத்யேகத் தகவல்**

உங்கள் உடல் எடை, வயது, பாலினம் ஆகியவற்றிற்கு ஏற்பச் சரியான அளவை இந்த 'ஆப்' மூலம் தெரிந்துகொள்ளலாம். அதற்கு வசதியாக உங்கள் உடல் எடை, வயது ஆகிய தகவல்களை முன்கூட்டியே இதில் பதிவு செய்ய வேண்டும். ஒரு நாளைக்கு நீங்கள் எவ்வளவு தண்ணீர் அருந்துகிறீர்கள்? எவ்வளவு தண்ணீர் உங்களுக்குத் தேவைப்படுகிறது என்பதை அலாரம் வைத்ததுபோல் இந்த `ஆப்' உங்களுக்கு நினைவுபடுத்திவிடும்.

போதுமான அளவு தண்ணீர் பருகுவதால் சருமம் பொலிவாக இருக்கும். இந்த 'ஆப்'பை பயன்படுத்திச் சரியான முறையில் தண்ணீர் பருகிவந்தால், சில நாட்களிலேயே உடல் ஆரோக்கியம் பெறுவதை உணரலாம். உடல் எடையைக் குறைக்க விரும்புபவர்களுக்கும் இந்த 'ஆப்' பயன்படும். இந்த 'ஆப்'பில் உடல் ஆரோக்கியத்துக்குத் தேவையான காய்கறிகள், பழ வகைகள் பற்றிய கட்டுரைகள், சமையல் செய்முறைகளை விளக்கும் பிரத்யேக வலைப்பூ உள்ளது. அதில் உடல்நலம் சார்ந்த பல தகவல்களைத் தெரிந்துகொள்ளலாம்.

**மரங்கள் அழிந்த பகுதியில் 2 டிகிரி வெப்பம் அதிகரிக்க வாய்ப்பு; ஒலி, ஒளி, காற்று மாசு உயரும் என்பதால் கவனம் தேவை'**



வார்தா புயலுக்குப் பின்... | கோப்புப் படம்: எம்.வேதன்

*சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் அறிவுறுத்தல்*

\வார்தா புயல் காரணமாக ஆயிரக்கணக்கான மரங்கள் அழிந்து, பசுமை பரப்பு குறைந்துள்ளதால், கோடையின்போது 2 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக சுற்றுச் சூழலியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம் மாவட்டங்களைச் சமீபத்தில் சூறையாடிய வார்தா புயல், ஒரு லட்சம் மரங்களுக்கு மேல் அழித்துவிட்டது. சென்னை யில் மட்டும், விழுந்த பெரிய அளவிலான, 50 ஆண்டுகள் பழமையான மரங்கள் 30 ஆயி ரத்தைத் தாண்டும் என்கின்றனர் தாவரவியல் ஆய்வாளர்கள். பசுமைப் போர்வையை இழந் துள்ள சென்னை, புறநகர், திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட் டங்களில்

அடுத்தடுத்த நிகழ்வுகள் எப்படியிருக்கும் என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். அப்போது தான் பாதிப்புகளை எதிர்கொள்ள முடியும்.

வெப்பம் அதிகரிக்கும்

மரங்களின் அளவு குறைவதால், காற்றில் ஈரப்பதம் குறைந்து, நீர்நிலைகளில் உள்ள நீரும் விரைவாக ஆவியாகிவிடும். இத னால், வெப்பநிலை அதிகரிக்கும் என சூழலியலாளர்கள் கருதுகின் றனர். இது தொடர்பாக, சுற்றுச் சூழலியலாளர் நக்கீரன் கூறும் போது, "காற்றில் உள்ள ஈரப் பதத்தை நிலைப்படுத்துபவை மரங்கள்தான். மரங்கள் இல்லா விட்டால் காற்றில் வெப்பம் அதி கரிக்கும்.

சூடான காற்று மேலெழும்பி வீசும்போது, மீதமுள்ள மரங்கள் சேமித்துள்ள ஈரத்தையும் கவரும். நீர்நிலைகள் துரிதமாக ஆவியாகும். பசுமை பரப்பு குறைவதால் சாதாரணமாக 2 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் அதிகரிக்கும். மரங்களற்ற சாலை களில் 3 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் அதிகரிக்கும். புறநகரை விட நகரங்களில் வெப்பநிலை அதிகமாகும்” என்றார்.

**ஒளி, ஒலி அளவு உயரும்**

பொதுவாக கான்கிரீட் கட்டி டங்கள் அதிகம் உள்ள நகரங் களை, வெப்பத்தீவு என சூழலிய லாளர்கள் வர்ணிக்கின்றனர். அந்த அளவுக்கு கான்கிரீட் கட்டிடங்கள் வெப்பத்தை உள்வாங்கி, அதன் பின் வெளிப்படுத்துகின்றன.

இதுதவிர, கட்டிடங்களும், தார்ச்சாலையும் ஒளியைப் பிரதி பலிக்கும் தன்மை கொண்டவை என்பதால், ஒளியின் பாதிப்பு அதிகரிக்கும்.

இதுகுறித்து நக்கீரன் கூறும் போது, "பொதுவாக மரங் கள் அடர்ந்துள்ள பகுதிகளில் வெயிலால் கண் கூசாது. மரங்களே இல்லாத பகுதியில் வெளிச்சம் அதிகரித்து கண்கள் கூசும். மரங்கள் உள்ள பகுதிகளில் 10 சதவீதத்துக்கு கீழ்தான் பிரதிபலிப்பு இருக்கும். ஆனால், கட்டிடங்கள் 60 சதவீதம் பிரதிபலிப்பதால் பாதிப்புகள் இருக்கும். அதே போல், காற்றில் பரவும் ஒலியை பொறுத்தவரை, பகலில் 90 டெசிபல், இரவு 80 டெசிபல் அளவு இருக்கும். சாலையில் 50 அடிக்கு மரங்கள் தொடர்ந்து இருந்தால். அந்த மரங்கள் காற்றில் பரவும் சப்தத்தை 20-30 டெசிபல் அளவுக்கு குறைத்துவிடும்" என்றார்.

**அதிகரிக்கும் காற்று மாசு**

காற்று மண்டலத்தில் வாகனங் கள் வெளியிடும் கார்பன் மோனாக் சைடு மற்றும் சிறு துகள்களின் அளவு அதிகரிக்கும்போது சுவா சக்கோளாறுகள் ஏற்படும். இந்த பாதிப்புகளை இயற்கையாகவே மரங்கள் குறைத்து வந்தன. தற்போது மரங்கள் குறைவதால் மாசு அதிகரிக்கும்.

இதுபற்றி நக்கீரன் மேலும் கூறும்போது, "காற்று மண்டலத்தில் உள்ள தூசியை மரங்கள் 70 சதவீதம் ஏற்றுக் கொள்ளும். அந்த தூசியை மழை வரும் போது, மீண்டும் தரைக்கு கொண்டு சேர்த்துவிடும். மரங்கள் இல்லாவிட்டால், 70 சதவீதம் தூசியும் பாதிப்பை ஏற்படுத்தும். கார்பன் அளவு அதிகரிக்கும். இந்த பாதிப்புகளை அடுத்த கோடைக்காலத்தில் உணர முடியும்" என்றார்.

**கவனம் தேவை**

ஏற்கெனவே பருவகால மாற்றம் சுற்றுச்சூழலில் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்தி வருகி றது. இந்நிலையில், ஒவ்வொரு பகுதியையும் சார்ந்த நுண் பருவநிலையில் நாம் கவனம் வைக்க வேண்டும் என்கிறார் நக்கீரன்.

இது தொடர்பாக அவர் கூறும் போது, "மரங்கள் அதிகமுள்ள, மழையை கவரும் பகுதியை நுண் பருவநிலை கொண்ட பகுதி எனலாம். சிறு குன்றுகள் இருந்தால் கூட மழை அதிகரிக்கும்.

இந்தவகையில் சென்னையில் கிண்டி நுண் பருவநிலை கொண்ட பகுதியாகும். இது போன்ற பகுதிகளில் பசுமைப் பரப்பை மீண்டும் கொண்டுவர வேண்டும்.

அதற்காக எளிதில் விழும் மரங்களை நடக்கூடாது. ஆணிவேர் கொண்ட மரங்களை அதிகளவு வளர்க்க வேண்டும். விதைகளை நேரடியாக ஊன்றினால்தான் ஆணிவேர் பலமான மரங்கள் கிடைக்கும். வளர்த்து நடப்படும் மரங்கள் இந்த அளவுக்கு உறுதி யாக இருக்காது. குறிப்பாக நமக்கே உரிய இயல்வகை மரங் களை அதிகளவில் நடவேண்டும். எவ்வளவு இழந்துள்ளோமோ அதைவிட அதிகமாக பசுமைப் பரப்பை அதிகரிக்க வேண்டும்" என்றார்.

## கரும்பு கொள்முதல் விலை டன்னுக்கு ரூ.4 ஆயிரமாக அரசு அறிவிக்க வேண்டும்

விவசாயிகளுக்கு புத்தாண்டு மற்றும் பொங்கல் பரிசாக கரும்பு கொள்முதல் விலை டன்னுக்கு ரூ.4000 என்று அரசு அறிவிக்க வேண்டும் என்று பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக இன்று (திங்கள்கிழமை) அவர் வெளியிட்ட அறிக்கையில், "தமிழகத்தில் உள்ள பெரும்பாலான பொதுத்துறை மற்றும்

தனியார் சர்க்கரை ஆலைகளில் கரும்பு அரவைப் பருவம் தொடங்கி சில வாரங்கள் ஆகிவிட்டன. சர்க்கரை உற்பத்திக்காக விவசாயிகளிடமிருந்து கரும்பு கொள்முதல் தீவிரமடைந்துள்ள நிலையில், அதற்கான கொள்முதல் விலை இன்னும் அறிவிக்கப்படவில்லை. இவ்விஷயத்தில் தமிழக அரசு காட்டும் அலட்சியம் கண்டிக்கத்தக்கது.

தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் தொடங்கி மார்ச் மாதம் வரை சர்க்கரை ஆலைகள் செயல்படுவது வழக்கம். கரும்பு கொள்முதல் செய்யப்பட்ட நாளில் இருந்து இரு வாரங்களில் அதற்கான விலை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

வழக்கம் போலவே நடப்பாண்டிலும் அக்டோபர் மாதம் முதல் படிப்படியாக சர்க்கரை ஆலைகளில் அரவைப் பருவம் தொடங்கி விட்ட நிலையில், கரும்புக்கான விலை இன்னும் விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை. இதற்குக் காரணம் கரும்பு கொள்முதல் விலையை தமிழக அரசு அறிவிக்காதது தான்.

அரவைப் பருவம் தொடங்குவதற்கு முன்பே அக்டோபர் மாதத்தில் கொள்முதல் விலை அறிவிக்கப்பட வேண்டும். ஆனால், டிசம்பர் மாதமாகியும் கரும்பு விலை அறிவிக்கப்படாததில் இருந்தே அரசு முடங்கிக் கிடப்பதை உணர முடியும்.

2016-17ஆம் ஆண்டிற்கான கரும்பு கொள்முதல் விலையை மத்திய அமைச்சரவை கடந்த ஏப்ரல் 6-ஆம் தேதியே அறிவித்து விட்டது. அத்துடன் தமிழக அரசு ஊக்கத் தொகையை சேர்த்து மாநில அரசின் பரிந்துரை விலையை அறிவிக்க வேண்டும்.

தமிழகத்தில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வரை மத்திய அரசு அறிவிக்கும் விலையுடன், மாநில அரசின் பரிந்துரை விலையாக ரூ.650

சேர்த்து வழங்கப்பட்டு வந்தது. 2013, 2014 ஆகிய ஆண்டுகளில் இது டன்னுக்கு தலா ரூ.100 வீதம் மொத்தம் ரூ.200 குறைக்கப்பட்டது. கடந்த ஆண்டில் பரிந்துரை விலை ரூ.100 அதிகரிக்கப்பட்டது. கரும்புக்கான கொள்முதல் விலையை மத்திய அரசு கடந்த 3 ஆண்டுகளாக மிகக் குறைந்த அளவிலே உயர்த்தி வரும் நிலையில், அதை ஈடுகட்டும் வகையில் பரிந்துரை விலை அதிகரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அரசோ சர்க்கரை ஆலைகளுக்கு ஆதரவாக செயல்பட்டு பரிந்துரை விலையை குறைத்துவிட்டது.

நடப்பு பருவத்திற்கான கரும்பு கொள்முதல் விலையை மத்திய அரசு உயர்த்தவில்லை. இத்தகைய சூழலில் மாநில அரசு அதன் பரிந்துரை விலையை உயர்த்தி வழங்கினால்தான் விவசாயிகளின் நலனை பாதுகாக்க முடியும்.

உத்தரப் பிரதேச அரசு கரும்புக்கான பரிந்துரை விலையாக டன்னுக்கு ரூ.750 சேர்த்து ரூ.3050 வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறது. மத்திய அரசு அறிவித்துள்ள கொள்முதல் விலை விவசாயிகளுக்கு எந்த வகையிலும் பயனளிக்காது என்பதால், நடப்பு பருவத்திற்கான தமிழக அரசின் பரிந்துரை விலையை நிர்ணயிப்பதற்கு அதை அடிப்படையாக கொள்ளக் கூடாது.

அதுமட்டுமின்றி, மத்திய அரசின் கொள்முதல் விலை அறிவிக்கப்பட்டதற்கு பிறகு சர்க்கரை சந்தை நிலவரம் தலைகீழாக மாறிவிட்டது. கடந்த ஆண்டு ஜூலை மாத நிலவரப்படி தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகளில் இருந்து ஒரு டன் சர்க்கரை ரூ.21,640 என்ற விலைக்கு கொள்முதல் செய்யப்பட்டது.

ஆனால், அதன்பின் படிப்படியாக விலை உயர்ந்து கடந்த வார நிலவரப்படி தமிழக சர்க்கரை ஆலைகளில் இருந்து கொள்முதல் செய்யப்படும் சர்க்கரையின் விலை டன்னுக்கு ரூ.36,250 ஆக உயர்ந்திருக்கிறது. இது சுமார் 70% உயர்வாகும். இதனால் சர்க்கரை ஆலைகளுக்கு கிடைக்கும் கூடுதல் லாபத்தில் ஒரு பகுதி விவசாயிகளுக்கும் கிடைக்கும் வகையில் கொள்முதல் விலை நிர்ணயிக்கப்பட வேண்டும்.

தமிழகத்தில் ஒரு டன் கரும்பு உற்பத்தி செய்ய ரூ.2450 செலவு ஆவதாக தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் ஆய்வில் தெரியவந்துள்ளது. அத்துடன் 50% லாபம் மற்றும் போக்குவரத்து செலவுகள் சேர்த்து ஒரு டன் கரும்புக்கு கொள்முதல் விலையாக ரூ.4,000 நிர்ணயிக்க வேண்டும்.

சர்க்கரை விலை 70% வரை அதிகரித்திருப்பதாலும், சர்க்கரை தயாரிக்கும்போது கிடைக்கும் துணைப் பொருட்களின் மூலம் கிடைக்கும் வருவாய் அதிகரித்திருப்பதாலும் இந்த அளவுக்கு கொள்முதல் விலை நிர்ணயம் செய்வது சாத்தியம் தான். இதை உணர்ந்து விவசாயிகளுக்கு புத்தாண்டு மற்றும் பொங்கல் பரிசாக கரும்பு கொள்முதல் விலை டன்னுக்கு ரூ.4000 என்று அரசு அறிவிக்க வேண்டும்" என்று ராமதாஸ் கூறியுள்ளார்.

**'வார்தா' புயல் பாதிப்புகளை ஆய்வு செய்ய அடுத்த வாரம் மத்திய குழு தமிழகம் வருகை**




சென்னையைப் புரட்டிப் போட்ட வார்தா புயல். | படங்கள்: ஆர்.ரகு

'வார்தா' புயல் பாதிப்புகளை ஆய்வு செய்ய மத்திய குழு அடுத்த வாரம் தமிழகம் வருகிறது.

மத்திய உள்துறை அமைச்சக இணை செயலர் தலைமையில் குழு வர உள்ளது. இக்குழு சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களை ஆய்வு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

'வார்தா' புயலின் வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் 1 லட்சத்துக்கும் அதிகமான மரங்கள் சாய்ந்தன. மின் கம்பங்கள் சாய்ந்ததால் மின் விநியோகம் தடைபட்டது. மின்சாரம், பால், குடிநீர் கிடைக்காமல் மக்கள் கடும் அவதிப்பட்டனர். மரங்களை அகற் றுவது உள்ளிட்ட பணிகள் போர்க்கால அடிப்படையில் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தென்மேற்கு வங்கக் கடலில் உருவான 'வார்தா' புயல் கடந்த 12-ம் தேதி அதிதீவிர புயலாக மாறி சென்னை மாநகர், புறநகர் பகுதிகளை தாக்கியது.

புயல் காற்றின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியால் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட் டங்களில் பல்லாயிரக்கணக்கான மரங்கள் வேரோடு சாய்ந்தன. மேலும் ஆயிரக்கணக்கான மரங்களின் கிளைகள் உடைந்து சாலைகள், கட்டிடங்கள், வாகனங் களின் மீது விழுந்து பெரும் சேதத்தை ஏற்படுத்தின. 3 மாவட்டங்களிலும் ஒரு லட்சத்துக்கும் அதிகமான மரங்களை 'வார்தா' புயல் சாய்த்தது.

சாலைகள், தெருக்களில் முறிந்து விழுந்த மரங்களை அகற்றும் பணி வேகமாக நடந்து வருகிறது. சென்னை மாநகராட்சி ஊழியர்கள், காவல், தீயணைப்பு துறையினர், சமூக நல அமைப்புகளை சேர்ந்தவர்கள் மரங்களை அப்பறப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

சென்னை உட்பட 4 மாவட்டங்களில் 17 ஆயிரம் மின் கம்பங்கள் சாய்ந்தன. 40 கோபுரங்கள், 800 மின்மாற்றிகள் மற்றும் 4500 மின் பகிர்மானப் பெட்டிகள் சேதமடைந்தன. மேலும், 15,000 கி.மீ. உயர்நிலை மின்கம்பிகள் சேதமடைந்துள்ளதாக தமிழக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழ்நாடு மின்சார வாரியத்துக்கு ரூ.1000 கோடிக்கு மேல் இழப்பு ஏற்பட்டது.

இந்நிலையில் 'வார்தா' புயல் நிவாரணப் பணிகளுக்கு ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அறிவித்தார்.

புயல் பாதிப்பு குறித்து மத்திய குழு ஆய்வு செய்ய வேண்டும், நிவாரணப் பணிகளுக்கு ரூ.1000 கோடிக்கும் அதிகமாக நிதி ஒதுக்க வேண்டும் என்று தமிழக தலைவர்கள் மத்திய அரசிடம் வலியுறுத்தி வந்தனர்.

இதைத் தொடர்ந்து தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் திங்கட்கிழமை அன்று பிரதமர் மோடியை டெல்லியில் சந்தித்து, தமிழகத்தில் 'வார்தா' புயலினால் ஏற்பட்ட சேதத்திற்கு மத்திய அரசு நிவாரணம் அளிக்கவும் மற்றும் தமிழகம் சார்பாக பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவினையும் அளிக்க உள்ளார்.

இந்த சூழலில் 'வார்தா' புயல் பாதிப்புகளை ஆய்வு செய்ய மத்திய குழு அடுத்த வாரம் தமிழகம் வருகிறது.

மத்திய உள்துறை அமைச்சக இணை செயலர் தலைமையில் குழு வர உள்ளது. இக்குழு சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களை ஆய்வு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தினமலர்
உண்மையின் உரைகல்

**வறண்ட பிரதேச பேரிச்சம் பழம்: ஆலப்பாக்கம் கிராமத்தில் சாகுபடி**

ஆலப்பாக்கம்: வறண்ட பிரதேசங்களில் விளைய கூடிய பேரிச்சம் பழ மரங்களை ஆலப்பாக்கம் கிராமத்தில் ஒரு விவசாயி நட்டுள்ளார். அவை, நடப்பாண்டு அறுவடைக்கு வரும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நெல், கரும்பு, மற்றும் சிறு தானியங்கள் பயிரிடப்படுகின்றன. இது தவிர, பனி பிரதேச காய்கறிகளான கேரட்,

பீன்ஸ், பீட்ரூட், காலி பிளவர் ஆகிய காய்கறிகளும் விளைவிக்கப்படுகின்றன.

ஆனால், முதல் முறையாக வாலாஜாபாத் வட்டாரம், ஆலப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த முன்னாள் ஊராட்சி தலைவர் உமாபதி என்பவர், தன் நிலத்தில் பேரிச்சம் பழ மரங்களை நடவு செய்துள்ளார்.

இந்த மரங்களுக்கு சொட்டு நீர் பாசன முறையை கையாண்டு வருகிறார். வறண்ட பிரதேசங்களில் பயிரிடப்படும் பேரிச்சம் பழ மரங்கள் காஞ்சிபுரம் மாவட்ட மண்ணுக்கு கை கொடுக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

விளைச்சலை பொறுத்தே, அந்த பயிரின் வெற்றி கணிக்கப்படும் என, வேளாண் துறை வட்டாரம் தெரிவித்துள்ளது.

விளைச்சல் தான் வெற்றி

தர்மபுரி பகுதியைச் சேர்ந்த நெருங்கிய நண்பர் ஒருவர் பரிந்துரையின் பேரில், பேரிச்சம் பழ மரங் களை நடவு செய்துள்ளோம். மூன்று ஆண்டுகளுக்கு பின் விளைச்சல் தரும் என, கூறியுள்ளனர். மூன்று ஆண்டுகள் நிறைவடைய உள்ளது. விளைச்சல் எவ்வாறு இருக்கிறது என்பதை பொறுத்தே, அடுத்த நடவடிக்கை தெரியும்.

**வெண்டை, கத்தரி சாகுபடி புயலால் பாதிப்பு**

செய்யூர்: வர்தா புயலால், வெண்டை, கத்தரி சாகுபடி வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது என, விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

செய்யூர் வட்டத்தில், தோட்டக்கலை பயிர்களான, காய்கறி மற்றும் கீரைகளை விவசாயிகள் பயிரிடுகின்றனர். சித்தாமூர், லத்துார்

ஒன்றியங்களில், வெண்டை, கத்தரி, புடலங்காய், பாகற்காய் போன்ற காய்கறிகளை பல ஏக்கரில் சாகுபடி செய்கின்றனர். இங்கு விளையும் காய்கறிகளை, சுற்றுவட்டாரத்தில் நடைபெறும் வார சந்தையில் விற்றுவந்தனர்.

இந்நிலையில், சமீபத்தில் வீசிய வர்தா புயலால், சாகுபடி செய்யப்பட்ட வெண்டை, கத்தரி செடிகள் பூத்து காய்ந்திருந்த நிலையில், செடிகள் சாய்ந்து, பூக்கள் உதிர்ந்து, விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதாக, விவசாயி கவலை தெரிவிக்கின்றனர்.

வெண்டை, கத்தரி, 2 ஏக்கரில், நடவு செய்துள்ளேன். உழவு, விதை, நடவு, களை அனைத்திற்கும் கூலி ஆட்களை கொண்டு விவசாயம் செய்தேன். தற்போது, வீசிய புயலால், செடிகள் அனைத்தும் பாழாகிவிட்டன. இதனால், எனக்கு, 30 ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

**புயலால் நெற்பயிர்கள், சவுக்கு மரங்கள் நாசம்**

கடம்பத்துார்: கடம்பத்துார் ஒன்றியத்தில், 'வர்தா' புயலால், நெற்பயிர்கள் மற்றும் சவுக்கு தோப்புகள் நாசமடைந்துள்ளன. திருவள்ளூர் மாவட்டத்தில், 'வர்தா' புயலால் மரங்கள், மின் கம்பங்கள் மற்றும் நெற்பயிர்கள் அதிகளவில் சேதமடைந்துள்ளன. இதில், கடம்பத்துார் ஒன்றிய பகுதிகளில், மொத்தம், 5,867 ஏக்கரில் விவசாயிகள் நெற்பயிர் பயிரிட்டு வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த, 12ம் தேதி தாக்கிய, 'வர்தா' புயலால், ஒன்றிய பகுதிகளான பிரையாங்குப்பம், பேரம்பாக்கம் உட்பட பல பகுதிகளில், 2,250 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிர்கள் சேதமடைந்தன.

ஏற்கனவே, கடம்பத்துார் ஒன்றிய பகுதிகளில் வறட்சியால், 1,645 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த நெற்பயிர்கள் நாசமான நிலையில், தற்போது புயலால் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டது, விவசாயிகளிடையே மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதேபோல், பேரம்பாக்கம், காவாங்கொளத்துார், சத்தரை, கொண்டஞ்சேரி, அகரம், வயலுார், விடையூர் உள்ளிட பல கிராமங்களில், 1,000 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த சவுக்கு மரங்களும் சேதமடைந்து உள்ளன.

இது குறித்து அரசு அதிகாரிகள், நெற்பயிர்கள் மற்றும் சவுக்கு மரங்கள் சேதமடைந்த பகுதிகளை நேரில் பார்வையிட்டு, நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**கடும் வறட்சியால் முந்திரி துளிர் விடுவது...தாமதம்! மகசூல் குறையும் என விவசாயிகள் கவலை**

விருத்தாசலம்: மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவுவதால், முந்திரியில் துளிர் விடுவது தள்ளிப் போகும் நிலை ஏற்பட்டுள்ளதால் மகசூல் குறையும் என விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.



மாவட்டத்தில் பண்ருட்டி, விருத்தாசலம், காடாம்புலியூர், நெய்வேலி உள்ளிட்ட பகுதிகளில் 75 ஆயிரம் ஏக்கருக்கு மேல் முந்திரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அதில், கடந்த 2011ல் வீசிய 'தானே' புயலில் கோடிக்கணக்கான மரங்கள் வேருடன் சாய்ந்ததால், முந்திரி விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதித்தது.

இந்நிலையில் புயலுக்கு எஞ்சிய மரங்களை விவசாயிகள் பராமரித்து வருவதுடன், காலி நிலங்களில் புதிய வி.ஆர்.ஐ - 3 வீரிய ஒட்டு ரக கன்றுகளை நட்டு பராமரித்து வருகின்றனர். பெரும்பாலான முந்திரிக் கன்றுகள் மானாவாரியாக நட்டு வளர்ப்பதால் அவற்றை அக்டோபர், நவம்பரில் பெய்யும் வடகிழக்குப் பருவமழையைப் பயன்படுத்தி உரமிட்டு பராமரிப்பது வழக்கம். தொடர்ந்து டிசம்பர், ஜனவரியில் துளிர்விட்டு பூத்து, காய்க்கத் துவங்கும்; ஏப்ரல், மே மாதங்களில் அறுவடை நடைபெறும்.

இந்நிலையில் நடப்பாண்டு தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவமழை போதிய அளவு பெய்யாத நிலையில், முந்திரி மரங்கள் இதுவரை துளிர்விடாமல் அப்படியே உள்ளதால் பூப்பதும், காய்ப்பதும் தள்ளிப்போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

காலதாமதமாக காய்க்கும் முந்திரி கொட்டைகளின் திரட்சி குறைந்து மகசூல் பாதிக்கும் என்பதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். இது குறித்து விருத்தாசலம் மண்டல ஆராய்ச்சி நிலையத் தலைவர் அனீஷாராணி கூறுகையில், 'மாவட்டத்தில் பாரம்பரியமாக நட்டு வளர்க்கப்படும் முந்திரிகள், வி.ஆர்.ஐ - 3 வீரிய ரக முந்திரிகள் இரண்டுக்குமே ஏப்ரல் மாதம் சீசனாகும்.

நடப்பாண்டு கடும் வறட்சி நிலவுவதால் துளிர்விடுவது தள்ளிப் போகிறது. கால தாமதமாக காய்க்கும் முந்திரி கொட்டைகள் எடை குறைய வாய்ப்புள்ளது. எனவே, முந்திரி மரங்கள் மீது சாதாரண தண்ணீரை தெளித்தோ அல்லது லிட்டர் தண்ணீரில் 10 கிராம் மோனோ அம்மோனியம் பாஸ்பேட் கரைசலை தெளித்தால் மரங்கள் துளிர்விட்டு, பூக்கத் துவங்கும்' என்றார்.

**பயிர்களை மேய்ச்சலுக்கு விட்ட விவசாயிகள்...கண்ணீர்! மழை பொய்த்ததால் சாகுபடி கேள்விக்குறி**

உளுந்தூர்பேட்டை: உளுந்தூர்பேட்டை பகுதியில் பருவமழை பொய்த்ததால், நெல் பயிர்கள் காய்ந்ததால் அதிர்ச்சியடைந்த விவசாயிகள், மாடுகளை மேய்ச்சலுக்கு விட்டுள்ளனர். இதே நிலை நீடித்தால், விவசாய சாகுபடி தொழில் கேள்விக்குறியான நிலைக்கு தள்ளப்படும் அபாயம் உருவாகியுள்ளது.

உளுந்தூர்பேட்டை தாலுகா பகுதியில் சுமார் உ லட்சம் ஏக்கர் பரப்பிலான விவசாய சாகுபடி பரப்பு அமைந்துள்ளது. பருவ கால மழையை நம்பி இப்பகுதி விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர்.

கடந்த பல ஆண்டுகளாக பருவ மழை பொழியாமல் ஏமாற்றி வருவது தொடர் கதையாகியுள்ளது. இதனால் தொடர்ந்து விவசாய சாகுபடியில் நஷ்டத்தை சந்திக்கும் விவசாயிகள் பெருமளவில், விவசாயத்தை கைவிடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். மேலும் பலர், பிழைப்புக்காக வெளியூர் வேலைக்கு செல்வது அதிகரித்துள்ளது.

ரியல் எஸ்டேட் ஆதிக்கத்தால், விவசாயம் செய்ய கூடிய பரப்பளவு குறைந்து கொண்டே வருகிறது. இருப்பினும் தற்பொழுது பாதியாக

குறைந்து ஒரு லட்சம் ஏக்கர் பரப்பளவில் பயிர் சாகுபடி குறைந்துவிட்டது. கடன் வாங்கி செலவு செய்து, சாகுபடி செய்த பயிர்களை காப்பாற்ற விவசாயிகள் கடுமையாக போராடி வருகின்றனர்.

பருவ மழை பொய்த்ததால், நிலத்தடி நீர் மட்டம் குறைந்து விவசாய பாசனத்திற்கு போதுமான அளவில் கிணற்று தண்ணீர் கிடைக்காத நிலை உருவாகியுள்ளது. இது விவசாயிகளிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் விவசாயிகள் பலர் நிலத்தின் ஒரு பகுதியினை மட்டுமே பயிரிட்டுள்ளனர். பலரும் தங்களது விவசாய நிலத்தில் பயிரிடாமல், கரம்பாக (தரிசுநிலமாகவே) விட்டு வைத்துள்ளனர்.

பயிரிட்ட பயிர்கள் இனியாவது பிழைக்குமா என்ற கேள்வி விவசாயிகளிடையே தொற்றி கொண்டாலும், நெல், உளுந்து பயிர்களும் போதிய தண்ணீர் கிடைக்காமல் காய்ந்து வருகின்றன. பல பகுதிகளில் பயிர்கள் காய்ந்து வருவதால், மகசூல் மிகவும் குறைந்தளவே இருக்கும்.

ஒரு சில விவசாயிகள் மழை, கிணற்றில் தண்ணீர் இல்லாததால் காய்ந்துவரும் நெல் பயிர்கள் மிச்சம் மீதியும் வீணாவதை தடுக்க மாடுகளுக்கு உணவாக தர முடிவு செய்துவிட்டனர். பாடுபட்டு சாகுபடி செய்த நெற் பயிர் வயல்களில், மாடுகளை மேய்ச்சலுக்கு விட்டுள்ளனர்.

இதனை கண்டு விவசாயிகள் கண்ணீர் விடும் நிலை உருவாகியுள்ளது. இதே நிலை நீடித்தால், விவசாய சாகுபடி தொழில் கேள்விக்குறியான நிலைக்கு தள்ளப்படும் அபாயம் உருவாகியுள்ளது.

விதைகள் தேக்கம்

விவசாயிகளுக்கு சம்பா சாகுபடி பயிர்களுக்கு விநியோகிப்பதற்காக உளுந்துார்பேட்டை வட்ட வேளாண்துறை அலுவலகத்தில் கடந்த அக்டோபர் மாதமே விதைகள் இருப்பு வைக்கப்பட்டன.

நெல் விதை ரகங்களில் கோ-50, கோ-51, சொர்ணா, ஏடிடி -49, புதிய ரகம் கே-6 என மொத்தம் 80 டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. அதேபோல் மணிலா 4 டன், உளுந்து 4,900 கிலோ, எள் 300 கிலோ இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மழை பொய்த்ததால் விதைகள் தேங்கி கிடக்கிறது.

அதே போல் திருநாவலுார் வேளாண்துறை அலுவலகத்தில் நெல் விதை 74 டன் இருப்பு வைக்கப்பட்டு, 5 டன் மட்டுமே விற்பனையாகியுள்ளது. உளுந்து 4 டன், மணிலா 6,700 கிலோ இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

வேதனையில் விவசாயி

உளுந்துார்பேட்டை அடுத்த கணையார் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி தண்டபாணி கூறியதாவது:

கடந்த 10 ஆண்டுகளாக இயற்கை விவசாயம் செய்து வருகிறேன். தற்பொழுது பருவ மழை பொய்த்ததால், கிணற்றில் கூட தண்ணீர் கிடையாது. மழையையும், கிணற்று தண்ணீரையும் நம்பி 5 ஏக்கர் இயற்கை விவசாய முறையில் நெல் பயிரினை நடவு செய்தேன். தண்ணீர் கிடைக்காததால், பயிர்கள் காய்ந்து கருக துவங்கின.

மிச்சமுள்ள பயிர்களும் காய்ந்து வருவதால், மாடுகளை மேய்ச்சலுக்கு விட்டுவிட்டோம். கடன் வாங்கி பயிரிட்டு, மாடுகளை நெல் வயலில் மேய்ச்சலுக்கு விடும்போது, கண்ணீர் தான் வருகிறது. மழை தொடர்ந்து ஏமாற்றினால் விவசாய தொழிலை விடுவதை தவிர வேறு வழியில்லை. இவ்வாறு கண்ணீர் மல்க வேதனையுடன் தண்டபாணி தெரிவித்தார்.